# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஆகஸ்ட் 2003 ஜீவியம் 9 மலர் 4**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| லைப் டிவைன் | 6 |
| இம்மாதச் செய்தி | 14 |
| எங்கள் குடும்பம் | 15 |
| சாவித்ரி | 38 |
| சத்தியஜீவன் | 40 |
| அன்பர் கடிதம் | 46 |
| அஜெண்டா | 49 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 51 |
| லைப் டிவைன் - கருத்து | 58 |
| யார் சாதகர் | 60 |


✯ ✯ ✯

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**783) பல தத்துவங்களாலான ஸ்தாபனம், ஒரு தத்துவத்தால் செயல்பட்டால், மற்றவை, பின் பரிணாம வளர்ச்சியாக எழக்கூடும்.**

*பல திறமைசாலிகளிருந்தாலும், தலைவர் ஒருவரே.*

சிருஷ்டிக்குரிய தத்துவங்கள் 7, 8 மறைந்திருக்கும். ஒன்றே வெளிப்படும் என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். பரிணாமம் ஒரு சமயத்தில் ஒரு தத்துவத்தை மட்டும் வெளிப்படுத்துவதால், மறைந்துள்ள மற்ற தத்துவங்கள் பிறகு வெளிவரும் என்கிறார். எல்லாத் தத்துவங்களும் முக்கியமானவை என்றாலும் ஒரு சமயத்தில் ஒரு தத்துவம்தான் வெளிப்பட முடியும்.

☆ ☆ ☆

**784) எண்ணத்திலிருந்து ஜீவியத்திற்குப் போனால், அவிழாத சிக்கல்கள் அவிழும்.**

*எண்ணத்தின் சிக்கல்களை ஜீவியம் அவிழ்க்கும்.*

ஜீவியம் எண்ணத்திற்கு அடிப்படை. மேலெழுந்துள்ள எண்ணத்தில் சிக்கல்கள் ஏற்பட்டால், அடிப்படையான ஜீவியத்தை எட்டினால் சிக்கல்கள் தாமே அவிழும். நூறு பிரச்சினைகள் உள்ள வறுமையான வீட்டில் வருமானம் உபரியானால் பிரச்சினைகள் மறைவது போன்றது இக்கருத்து.

☆ ☆ ☆



**785) அரைகுறையாக விட்டவற்றை மீண்டும் அதிதீவிரத்தோடு பின்பற்ற முன்வருவது மனதின் சுபாவம்.**

*விட்டகுறை வீரியத்துடன் தொடரும்.*

மனம் எதையும் அரைகுறையாக விடாது. எடுத்ததை முடிக்கும்வரை ஓயாது. நாம் பாதியில் விட்டுவிட முயன்றால், மனம் மீண்டும் அதை நாடும். நாடும்பொழுது அதிக தீவிரத்துடன் நாடும்.

☆ ☆ ☆

**786) உள் மனத்தின் ஆழத்தைத் தொடுவதே பகவான் தேடிய சூட்சும இரகஸ்யம்.**

அலிப்பூர் ஜெயிலில் பகவான் முன் தோன்றிய விவேகானந்தர் பகவான் கையில் கீதையைக் கொடுத்து, அவர் நாடுவதைச் சுட்டிக்காட்டி, ‘‘இதில்லை, அது’’ என சத்திய ஜீவியத்தைக் காண்பித்தார். பகவானுக்குப் புரியவில்லை. புரிய 15 நாள் ஆயிற்று. புரியும்வரை விவேகானந்தர் தினமும் பகவான் முன் தோன்றினார். எதை நாடவேண்டும் என விவேகானந்தர் காட்டிவிட்டார். எப்படி நாடுவது? நிஷ்டை, தியானம் என்றால் மனம் மேலே போகும். மேலே போனால் மோட்சம் வரும். அதில்லை என்றபின் என்ன செய்வது என பகவானுக்குத் தெரியவில்லை. 10 வருஷ யோக முயற்சி, சோதனைகளால் மேலே போவதற்குப் பதிலாக, உள்ளே சென்று மனத்தின் ஆழத்திலுள்ள சைத்தியப்புருஷனைக் காணவேண்டும் என்று கண்டார். இதுவே ‘நான் கண்ட இரகஸ்யம்’ என்றார்.

☆ ☆ ☆

**787) புலன்களிலிருந்து விடுபட்ட அறிவு ஞானமாகிறது.**

வேதாந்தம் கண்ட உண்மையிது. விஞ்ஞானம் இன்றுவரை இதைக் காணவில்லை. ஐன்ஸ்டீன் இந்த உண்மையை அறியாதவன் விஞ்ஞானியில்லை என்றார்.

☆ ☆ ☆

**788) ஜடத்தையும், சச்சிதானந்தத்தையும் இணைப்பது மனிதன் கடமை.**

ஜடத்தை விலக்கி, சச்சிதானந்தத்தைக் காண்பது மரபு வழி. இரண்டையும் இணைப்பது பூரண யோகம்.

☆ ☆ ☆

**789) சிருஷ்டிக்கு முன்னுள்ள ஆனந்தத்தை சிருஷ்டியின் ஜடப்பொருளில் வெளியிட சச்சிதானந்தம் முயல்கிறது.**

ஆனந்தம் என்பது விஞ்ஞான கண்டுபிடிப்பு (scientific discovery) போன்றது. ரேடியோ அலைகளைக் கண்டுபிடிப்பது பெரிது. அது ரேடியோவாக வரும்வரை நமக்குப் பயன்படாது. ரேடியோ அலைகளை ரேடியோவாகச் செய்து மார்க்கட்டுக்கு அனுப்புவதுபோல் ஆனந்தத்தை ஜடப்பொருளில் வெளியிடுவது.

☆ ☆ ☆

**790) முழுமையிலிருந்து முழுமையை எடுத்தால் முழுமை மிஞ்சும் என்பது ஜடத்திற்கும் பொருந்தும்.**

கொள்ளத்தான் குறையாது எனக் கல்வியைக் கூறியவர்கள் கல்வியைப் பெற்றவர் பிறருக்குக் கொடுத்தால் கல்வி வளரும், அறிவும் வளரும் என்றனர். நாம் இதைப் பணத்திற்கும்



சொல்லலாம். பணம் கொடுக்கக் கொடுக்கக் குறையாது, வளரும் என்பதே அன்னையின் உண்மை. மேலும் சொல்லப்போனால் ஒரு டம்ளர் பாலை ஊற்றிக் கொடுத்தபின், டம்ளரில் பால் குறையாது என்பது ஆன்மீக உண்மை, அக்ஷய பாத்திரம் கூறுவது. அன்னையை நாம் மனதால் ஏற்றுக்கொண்டோம்.

- **உணர்வால் அன்னையை ஏற்றால், பணம் கொடுத்தால் வளரும்.**
- **உடலால் அன்னையை ஏற்றால் டம்ளரில் பால் எடுக்க எடுக்கக் குறையாது.**

இவை பெரிய ஆன்மீகச் சித்திகள். ஏதோ ஒரு சமயம் நாம் இதன் சாயலைக் காண்கிறோம். நிலையாக நடக்க பக்தியும் நம்பிக்கையும் முழுமையாக வேண்டும்.

*தொடரும்...*

☆ ☆ ☆

**ஜீவிய மணி**

ஏழையின் முழுச் சொத்தும்

பணக்காரனுக்கு ஒரு நாள் விருந்து.

லைப் டிவைன்

கர்மயோகி

## XII. Delight of Existence : The Solution

Page No. 100
Para No. 1

Now we conceive of delight.
It is underlying existence.
It is inalienable.
We know the surface sensations.
They are outward sensations.
Some are positive.
Some others are negative.
A few are neutral.
Existence is an infinite deep.
These sensations are waves and foams of that deep.
We are examining a problem.
It is the problem of delight.
Here lies a true solution.
We arrive at that solution.
There is the Self of things.
It is an existence.
It is indivisible.
It is infinite.
That existence has an essential nature.
It is a power.
It is a force.



## 12. ஆனந்தம் - விளக்கம்

இப்பொழுது ஆனந்தம் என்ன என்று தெரிகிறது.
ஆனந்தம் வாழ்வுக்கு அடிப்படை.
இவ்வானந்தம் அகலாத ஆனந்தம்.
மேலெழுந்த உணர்ச்சிகளுண்டு.
அவை புற உணர்வுகள்.
அவற்றுள் சில நல்லவை.
சில கெட்டவை.
ஒரு சில இரண்டிலும் சேராதவை.
சத் - வாழ்வு - என்பது அனந்தமான ஆழம்.
இவ்வுணர்ச்சிகள் அவ்வாழத்தின் அலைகள், நுரைகளாகும்.
நாம் ஒரு பிரச்சினையைக் கேள்வியாக எழுப்பியுள்ளோம்.
அது ஆனந்தம் என்ற அம்சம்.
அதற்குரிய பதில் இங்கு, இவ்வாழத்திலுள்ளது.
நாம் அப்பதிலை இங்குக் காண்கிறோம்.
ஜீவனுக்கு ஆத்மாவுண்டு.
அது சத் எனப்படும்.
அது முழுமையான அகண்டம்.
அது அனந்தம்.
சத்திற்கு அடிப்படையான சுபாவம் உண்டு.
அது சக்தி - செயலாற்றவல்லது.
அது சக்தி - சலனத்திற்குரியது.

It is an infinite force.
It can never perish.
It is a force of Self-conscious being.
That self-consciousness has an essential nature.
It is a knowledge of itself.
That knowledge is delight of being.
That delight is infinite and inalienable.
It is in all forms.
It is in formlessness too.
The indivisible being is eternally aware.
It is indivisible too.
The finite division is multiform.
But it is all appearances.
Still this self-existence has its self-delight.
The delight is not from outside.
It is self-delight.
Therefore it preserves itself.
It is perpetual.
Matter is inconscience.
It is only apparent.
Our soul is in bondage there.
It outgrows its bondage.
It reaches a self-conscious existence.
It is a particular mode.
It is its superficial existence, a habit.
It discovers the Conscious-Force.
It is infinite and constant.
It is immobile and brooding.



அது முடிவற்ற சக்தி.
அது அழியாதது.
அது சத்புருஷனின் சக்தி.
சத்புருஷனுக்கு அடிப்படையான சுபாவம் உண்டு.
அது தன்னையறியும் அறிவு.
அந்த ஞானம் சத்தின் ஆனந்தம்.
அந்த ஆனந்தம் அனந்தமானது, அகலாதது.
அது எல்லா ரூபங்களிலுமுள்ளது.
அரூபத்திலும் அது உண்டு.
அகண்டமான ஜீவன் அந்த ஆனந்தத்தை அனாதி காலந்தொட்டறிவான்.
அது அகண்டம்.
கண்டம் ஆயிரம் ரூபமுடையது.
அவை தோற்றம்.
இது சுயமான சத், சுயமான ஆனந்தம் உடையது.
ஆனந்தம் புறத்தினுடையதன்று.
அது அகத்திற்குரியது.
அதனால் அது அகலாது, அழியாது.
நிரந்தரமானது.
ஜடம் ஜீவனற்றது.
அதுவும் தோற்றம்.
ஆத்மா கட்டுண்டுளது.
ஆத்மா தன் தளைகளைக் களைகிறது.
களைந்து தன்னையறியும் நிலையை எய்துகிறது.
அது ஒரு குறிப்பிட்ட ரூபம்.
இந்த ரூபம் ஒரு பழக்கம், மேல் நிலைக்குரியது.
அது சித்-சக்தியைக் கண்டுகொள்ளும்.
அது அனந்தமான நிரந்தரமுடையது.
அசைவற்றது, அடை காக்கிறது.

Similarly the soul acts again in Matter.
Here Matter is in non-sensation.
That two is apparent.
Here too the soul discovers Delight.
It is an infinite conscious delight.
The soul attunes itself to that delight.
It is imperturbable, ecstatic, all-embracing.
This delight is the soul's delight.
This self is its own self in all.
Our view is ordinary.
It is a surface view.
The delight is hidden, profound, subconscious.
As it is with forms, so it is with all experiences.
The experiences are pleasant, painful, neutral.
Hidden, profound, subconscious, here too is that.
It enables and compels things to remain in existence.
Because of that man clings to existence.
It is an overmastering will-to-be.
It is the vital instinct of self-preservation.
It is imperishable matter physically.
Mentally it is a sense of immortality.
It attends the formed existence.
It does so through all phases of self-development.
Self-destruction is its reverse form.
It is only an occasional occurrence.
It is an attraction to the other state of being.
Delight is existence.
Delight is the secret of creation.



அதேபோல் மீண்டும் ஆத்மா ஜடத்தில் செயல்படுகிறது.
இப்பொழுது ஜடத்திற்கு உணர்வில்லை.
இதுவும் தோற்றம்.
இங்கும் ஆத்மா ஆனந்தம் காண்கிறது.
அது முடிவற்ற தன்னையறியும் ஆனந்தம்.
அனைத்தையும் தழுவும் அவ்வானந்தம் அசைக்கமுடியாத பூரிப்புடையது.
இந்த ஆனந்தம் ஆத்மானந்தம்.
ஆத்மா அனைத்திலும் உள்ள அதன் ஆத்மா.
நம் பார்வை சாமான்யமானது.
அது மேலெழுந்த பார்வை.
அதனால் ஆனந்தம் மறைந்துள்ளது, ஆழத்தில் உள்ளது, கனத்தது.
ரூபங்கட்குரிய சட்டம், அனுபவத்திற்கும் உண்டு.
சந்தோஷம், வலி, பராமுகம் ஆகியவை அனுபவங்கள்.
அவை மறைந்து, கனத்து, ஆழ்ந்துறையும்.
பொருள் உயிரோடு இருப்பது அனுபவத்தால். அனுபவம் நிர்ப்பந்திக்கும்.
அனுபவத்திற்காக மனிதன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருக்கிறான்.
அவனை மீறி ஆட்கொள்ளும் திறனுடையவை அனுபவம்.
தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் உயிரின் உணர்ச்சி.
ஜடம் அழியாமலிருப்பதும் அதனால்.
மனம் அதை அமரத்துவமாக அறிகிறது.
ரூபம் பெற்ற உயிர் உள்ள இடமெல்லாம் இது உள்ளது.
மனிதனுடைய வளரும் பருவங்களிலெல்லாம் அது உள்ளது.
தற்கொலை இதன் தலைகீழ் மாறிய ரூபம்.
அது ஏதோ ஒரு சமயம் எழுவது.
வாழ்வின் உயர்ந்த நிலைக்குரிய கவர்ச்சி.
வாழ்வு என்பது ஆனந்தம்.
ஆனந்தம் வாழ்வின் இரகஸ்யம்.

**Delight is the root of birth.**
**Delight is the cause and meaning of life.**
**Delight is the end of birth.**
**Creation ceases into Delight.**
**All existences are born from Ananda.**
**They remain in being in Ananda.**
**They increase in Ananda.**
**They depart to Ananda.**

*Contd...*

✯ ✯ ✯

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சமூகப் பழக்கங்கள் ஒரே தலைமுறையில் மாறும். சமூகத்தின் நம்பிக்கைகள் மாற ஒரு நூற்றாண்டாகும். சமூகத்தின் அமைப்பு மாற, அதன் ஆரம்ப நிலை அமைப்புகள் அழிந்து புதுப்பிக்கப்பட வேண்டும். குடும்பம், இன்று அதுபோன்ற மாற்றத்தைப் பெற்று வருகிறது.

*பழக்கமும் நம்பிக்கையும் மாறிய பின்னும் அமைப்பு மாறாது.*



**ஆனந்தம் பிறப்பின் மூலம்.**
**ஆனந்தம் வாழ்வுக்கு அர்த்தம் தருவது, அதன் காரணம்.**
**ஆனந்தம் பிறப்பின் முடிவு.**
**சிருஷ்டி ஆனந்தத்தில் முடிகிறது.**
**வாழ்வு முழுவதும் ஆனந்தத்தில் பிறந்தது.**
**வாழ்வுக்கு ஜீவனளிப்பது ஆனந்தம்.**
**வாழ்வு ஆனந்தத்தால் வளர்கிறது.**
**வாழ்வு ஆனந்தத்தை முடிவாக அடைகிறது.**

*தொடரும்...*

✯ ✯ ✯

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனத்தை ஒருநிலைப்படுத்துவதும், ஆத்ம சமர்ப்பணமும் ஒன்றே. நிலைப்படுத்தும்பொழுது, நாம் மனத்தால் மட்டும் செயல்படுகிறோம். சமர்ப்பணம் செய்யும்பொழுது, புற நிகழ்ச்சியையும் மனம் தழுவுகிறது. முந்தையது மோட்சத்தை நாடுவது; அடுத்தது திருவுருமாற்றத்தை நாடுவது.

*நிஷ்டை நாடுவது மோட்சம்.*

*சமர்ப்பணம் திருவுருமாற்றத்தை நாடுகிறது.*

# இம்மாதச் செய்தி

**கொடுப்பதே பெறுவதானால் அற்புதமான அன்பு தணியாத காதல் பிழம்பாகும்.**

**He who discovers love in life is one who gives that love so that it is evoked from other hearts, not one who expects it from others. Love is love that travels in one direction. Human love becomes divine love when the one direction becomes two directions.**

❂❂❂❂❂❂



## எங்கள் குடும்பம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

தாயார் : முதலியாரும், அவர் சம்சாரமும் பெண்ணை இந்த மாப்பிள்ளை கூடாது எனக் கூறச் சொன்னார்கள்.

பெண் : ஏன்?

தாயார் : உனக்கு அவர்களைத் தெரியுமில்லையா?

பெண் : நல்லவர்களில்லை, பொறாமைக்காரர்கள்.

தாயார் : பெண் நல்ல மாப்பிள்ளையைக் கட்டிக்கொள்வது பிடிக்கவில்லை.

பெண் : பெண் மீது பொறாமையா?

தாயார் : பெற்றோர் சொல்லியதை பெண் ஏற்றுக்கொண்டு மாப்பிள்ளையை மறுத்தாள்.

பெண் : நம்ப முடியவில்லையே.

தாயார் : முதலியார் தங்கை என்னிடம் கூறி வருத்தப்பட்டார்கள்.

பெண் : அவர்கள் அன்பராயிற்றே.

தாயார் : அவர்கள் என்னைக் கேட்டார்கள். இந்த மக்குப் பெண் தான் சாக மருந்து சாப்பிட்டுவிட்டது.

பெண் : என்ன கேட்டார்கள்?

தாயார் : நாங்கள் முக்கியமாக நம்புவது, “ஒருவர் எதிர்ப்பை மீறி அன்னை சக்தி பலிக்காது” என்பது.

பெண் : பெண்ணே வேண்டாம் என்றால், பெற்றோரே கூடாது என்று பொறாமைப்பட்டால், அதையும் மீறிச் செயல்பட ஒரு சக்தி உலகில் உண்டா என்பதற்குத்தான் படிக்காத பையனை உதாரணம் காட்டினீர்களா?

தாயார் : பெண்ணினுடைய அத்தையின் பிரார்த்தனையால் பெற்றோர் அறியாமல் திடீரென விஷயம் முடிந்தது.

பெண் : அன்னைக்கு அவ்வளவு சக்தியுண்டா? கவனிக்காத நிலத்தில் உபரியாக விளைவதைப் போலல்லவா இருக்கிறது. ஒரு வார்த்தை மறுத்துப் பேசினால் காரியம் கெட்டுப்போவதைக் காண்கிறோம். முழு எதிர்ப்பை மீறி முழுப் பலன் தருகிறது அருள். எனக்கு இப்பொழுது நினைவு வருகிறது. அவர்கள் வீட்டில் எல்லோரும் கருமி. அமெரிக்காவிலிருந்து மாப்பிள்ளை வந்தபொழுது, பெற்றோருக்கு எதுவும் வாங்கி வரவில்லை. பெண்ணின் அத்தைக்கு ஏராளமாக வாங்கி வந்தார் எனப் பேசினார்கள்.

தாயார் : தானே பலன் செய்தவர்க்கு வருகிறது.

பெண் : இது ஆச்சரியமாக இருக்கிறது. எந்தப் புத்தகம் படித்தால் நல்லது, சொல்லுங்கள் நான் படிக்கிறேன்.

பெண் இதுவரை இதுபோல் பேசியதில்லை. ஆனால் அன்னையை ஏற்கும் பக்குவம் படிப்பால் மட்டும் வாராது. இருந்தாலும் படிப்புக்கு முக்கியத்துவம் உண்டன்றோ எனத் தாயார் சந்தோஷப்பட்டாள். இரண்டு, மூன்று நாள்கள் கழித்து கணவர் ஆரவாரமாக, பதைபதைப்புடன் வந்தார். மனைவியைத் தனியே அழைத்துப்போய், தாம் ஒரு செல்வருடைய வீட்டில் நடந்த விருந்திற்குப் போயிருந்ததாகவும் அனைவரையும் தமக்கு அங்கு அறிமுகப்படுத்தியதாகவும் கூறினார்.



கணவர் : இது பெரிய இடம்.

மனைவி : இது அகில இந்திய கம்பனியாயிற்றே. அதன் முதலாளியைத் தெரியாதவரில்லையே.

கணவர் : எனக்கு எப்படி அழைப்பு வந்தது என ஆச்சரியப்பட்டேன்.

மனைவி : அந்த வீட்டிலிருந்து நமக்கு எப்படி அழைப்பு வரும்?

கணவர் : என்னை அனைவருக்கும் முதலாளி அறிமுகப் படுத்தினார்.

மனைவி : அதெல்லாம் வழக்கமில்லையே.

கணவர் : அனைவரும் என்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பதாகக் கூறினர்.

மனைவி : நம்பமுடியவில்லையே.

கணவர் : வரும்பொழுது முதலாளி மகனுடன் பேசினேன்.

மனைவி : அவனை எப்படி உங்களுக்குத் தெரியும்.

கணவர் : அவனுக்கு என்னைத் தெரியுமாம்.

மனைவி : என்ன சொல்கிறீர்கள்?

கணவர் : நம்ம புதிய கம்பனி product இந்தப் பிரபலத்தைக் கொடுத்திருக்கிறது என நான் புரிந்துகொண்டேன். பேசியவர்கள் எல்லோரும் அதைக் கேட்டனர்.

மனைவி உள்ளூர சந்தோஷப்பட்டு விஷயம் productஇல் இல்லை. இது மதர் என்று கணவரிடம் சொல்லமுடியாது என நினைத்தாள்.

மனைவி : உங்களுக்கு நல்ல கவனிப்பு இருந்திருக்கிறது.

கணவன் : முதலாளி மகன் "உங்களுக்காகவே அப்பா இந்த விருந்தை ஏற்பாடு செய்தார்" என்று கூறியபொழுது எனக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது.

மனைவி : **அன்னை விருந்தாக, productஆக, முதலாளியாக வருகிறார்.**

கணவன் : இனி அன்னையைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

"தாம் ஜெயித்துவிட்டோம். இனி தம்மைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும்" எனக் கணவர் நினைப்பதை மனைவி அறிந்தார். தாம் ஜெயிக்க அன்னையைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று கணவருக்குத் தோன்றவில்லை என்று அவருக்குத் தெளிவாயிற்று.

*மனைவி தான் கணவர்போலவே இருப்பதை அறியவில்லை.*

கணவருக்குத் தம் பெருமை முக்கியம். மனைவிக்குக் குடும்பம் உயரவேண்டிய அவசியம். இரண்டிலும் அன்னை பக்தியில்லை. சுயநலம் வெவ்வேறு உருவங்களில் வருகிறது என மனைவியால் அறியமுடியவில்லை. அன்னை யோகத்திற்குரியவர்கள், வாழ்வை யோகமாக ஏற்றவர்கட்குரியவர்கள் என்பது பெரிய உண்மை. ஓரூருக்கு பல்கலைக்கழகம் வந்தால், படிப்பவர்கட்கு அதனால் பலன் உண்டு. மளிகைக் கடைக்காரனுக்கும், அச்சாபீஸ்காரனுக்கும், கல்லூரியில் வேலையில்லை என்பதே உண்மையானாலும், ஹாஸ்டல் சப்ளை மளிகைக் கடைக்கும், கல்லூரியில் அச்சடிப்பவை அச்சாபீஸுக்கும் பெரிய வரப்பிரசாதம் என்பது உண்மை. வாழ்வை அன்னை பக்தியுடன் வாழ்பவருக்கு இன்று வாழ்விலில்லாத சிறப்புகள் கிடைக்கும் என்பதை நாமறிவதில்லை. இந்தத் தாயாருக்கு அது தெரியும். தாம் அன்னையை ஏற்றுக்கொண்டதைப்போல் குடும்பத்தில் அனைவரும் ஏற்றுக்கொண்டால் குடும்பம் 100ஆம் நிலையை அடையும் என்பதை அறிவார். இந்த நிமிஷம் வந்துள்ள பெரிய நிலையை குடும்பம் வரவேற்றால் - தம் பக்தியால் வருவதை குடும்பம் நன்றியுடன் போற்றினால் - குடும்பம் 80ஆம் கட்டம் அடைந்து நிலைக்கும் என்று அவர் பதைபதைக்கிறார். பதைப்பு கூடாது எனவும் அறிவார். அதுவே அவர் பிரச்சினை.

கணவர் : அன்னையை நீ சொல்வதுபோல எனக்குத் தெரியவில்லை. அவர்கள் சக்தி தெரிகிறது. எல்லாம் அன்னையால்தான் நடக்கிறது என்றாலும் அது மனதில் படவில்லை.

மனைவி : நாம் பலனை மட்டும் கருதுவதால் அது மனதில் படவில்லை.

கணவன் : இன்று எனக்குப் பலரும் - பல பெரிய மனிதர்களும் - கொடுத்த மரியாதை எனக்குப் புலப்படவில்லை. மேயர் நெருக்கமாகப் பேசினார். நம் வீட்டிற்கு அழைக்கலாம் என நினைத்தேன். தவறாகிவிடும் என பேசாமல் இருந்தேன். அவரே அதைப் பற்றிப் பேசியது எனக்கு அதிர்ச்சியாகிவிட்டது.

மனைவி : அன்னை தம் பங்கை அபரிமிதமாக நிறைவேற்றுகிறார். நம் பங்கு நிறைவேற்றப்படவேண்டும்.

கணவனுக்கு அன்னையைப் பற்றிப் படிப்பில்லை, நம்பிக்கையும் இல்லை. பலன் - ஆதாயம் - கண் நிறையத் தெரிகிறது. இவரிடம் எதுவும் பேசமுடியாது. பேசுவதில் பலனில்லை. அவரிடம் எதைச் சொல்ல நினைத்தாலும், அதை அன்னையிடம் மட்டுமே சொல்ல வேண்டும் என்று உறுதி பூண்டார். அன்று மாலை பெரியவன் வந்தான். அன்னையைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்றான். ½ மணி நேரம் ஏதோ பேசினான். எழுந்து போய்விட்டான். இந்த பார்ட்னர்ஷிப் வந்ததிலிருந்து பெரியவனுக்கு

நிலைகொள்ளவில்லை. அவனுக்கு வேண்டியது நிதானம், அன்னையில்லை. அதையும் அவனிடம் பேசமுடியாது. அன்னையைத்தான் கேட்கவேண்டும். வீட்டில் அனைவரும் பாக்டரி வந்து 10 ஆண்டானபின் பல கோடி வருமானம் வரும்பொழுது எப்படியிருப்பார்களோ அப்படி இப்பொழுதே நினைக்கிறார்கள். இது சரியில்லை. யாரைப்போய் நிதானமாக இருக்கும்படிச் சொல்ல முடியும்? அதையும் அன்னையிடம்தான் சொல்லவேண்டும். எதையும் அன்னையிடம்தான் சொல்லவேண்டும் என்றால் என்ன பொருள்? அதை அன்னையிடம் சொல்வதாகக் கொள்ளலாம். அல்லது நம் மனம் குறுக்கிடாமல், நம் ஆசை குறுக்கிடாமல் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கொள்ளலாம். நம்முள் உள்ள அன்னையை நாம் நம்மைவிட முக்கியமாகக் கருதவேண்டும் எனப் பொருள். சுயநலம் விலகி, அன்னை நலம் மனத்தை ஆட்கொள்ள வேண்டும் எனலாம். **நமக்கு நம்மைவிட அன்னை முக்கியமாக வேண்டும் என்பதே சூட்சுமம்**. தொழில் திரும்பி வந்தபின் வீட்டின் நடைமுறை மனைவிக்குப் பூரணதிருப்தி. அத்துடன் அவருக்கு அன்னையின் அதிகபட்சம், குறைந்தபட்சம் தெரியும். அனைவரும் அன்னையை அன்னைக்காக ஏற்றால் பலன் அதிகபட்சம். அனைவரும் தொழிலுக்காக - ஆதாயத்திற்காக - அன்னையை வாயளவில் ஏற்றால் பலன் குறைந்தபட்சம். இதில் தானும் மற்றவர்கள் போலிருப்பது தெரிந்தாலும் மனம் அதற்காக வெட்கப்படவில்லை. இக்குறைந்தபட்சப் பலன் வர ஆரம்பிக்கும்முன் வீட்டின் அஸ்திவாரம் நிலைகுலைந்ததை மனைவி கண்டார். எதையும் திட்டமிட முடியாது, நினைக்கவும் முடியாது. நம் அளவுக்கு மீறியவை என அறிந்த மனைவி தாம் நிதானமாக இருப்பதே மேல் என நினைக்கும்பொழுது அது மட்டும் இல்லை எனக் கண்டார். தன் நிலையிழந்தவர் போய் மேஜை மீதிருந்த புத்தகங்களை அடுக்கி வைக்கலாம் என்று எடுக்கப் போகும்பொழுது புத்தகங்கள் மீதிருந்த கடிகாரம் உருண்டு கீழே விழுந்தது. மேஜைக்குக் கீழேயிருந்த சிறியவன் கடிகாரம் தரையில் விழாமல் பிடித்துக்கொண்டான். “அம்மா இது Mother's Grace” எனச் சத்தமிட்டான்.



சிறியவன் : உங்களுக்கு அருளிருக்கிறது. தவறினாலும் தவறு வருவதில்லை. நானும் அன்னையை உங்களைப்போல் ஏற்கவேண்டும்,

என்று உருக்கமாகப் பேசியபொழுது இது எவ்வளவு உண்மையானது எனத் தாயார் யோசனை செய்தார். அதே சமயம் மற்ற மூவரும் அங்கு வந்து, “இன்று இரவு நாம் 5 பேரும் ½ மணி தியானம் செய்யலாமா?’’ எனக் கேட்டனர். மனைவிக்கு அளவுகடந்த சந்தோஷம். அத்துடன் அவர் மனம் விஷயம் தியானத்திலில்லை, மனப்பக்குவத்திலிருக்கிறது என்று கூறிற்று.

தியானம் ஆரம்பிக்கும்முன் அனைவரும் கூடினர். சிறியவன் தன்னை அண்ணன் அன்று கேலி செய்ததைத் தகப்பனார் கண்டிக்க வேண்டும் என்றான். பெரியவன் தான் கேலி செய்யவில்லை என்று பொய் பேசினான். தகப்பனாரிருந்ததால் காரம் வளரவில்லை. சூழல் சூடாகிவிட்டது. முதல் நாள் தியானத்திற்கு முன் சூழல் மாறியது வீட்டு நிலையை மனைவிக்குத் துல்லியமாகக் காட்டியது.

- *வீட்டார் மனம் தியானத்தை நாடுகிறது.*
- *அவர் குணம் சூடாக இருக்கிறது.*

என் மனம் ஆதாயமாக இருக்கும்வரை மற்றவரை நான் எப்படிக் குறை கூறமுடியும் என அறிவு கூறினாலும் மனம் ஆதாயத்தையே நாடுவதைக் கண்டு முதல்முறையாக வெட்கப்பட்டார். சிறியவன் முகம் மலர்ந்து சிரித்தான். பெரியவன் ஏதோ பராமுகமாக இருப்பதைப் போல் பார்த்தான். பெண் அனைவரையும் மாறிமாறிப் பார்த்தாள். கணவன் முகம் அமைதியாக இருந்தது. சூழல் அமைதியாகிவிட்டது. சூடு இல்லை. தாம் வெட்கப்பட்டவுடன் சூழல் அமைதியானது மனைவிக்குக் கண்ணில்பட்டது. தியானம் சிறப்பாக நடந்தது. முடிந்தவுடன் அவரவர் தம்மிடத்திற்கு எதுவும் பேசாமல் போய்ச் சேர்ந்தனர். இரவு சாப்பாடு வழக்கத்தைவிட அமைதியாக சந்தோஷமாக இருந்ததைக் கண்டு தம் வீடு மாறிவிட்டதா என

மனைவி நினைத்தார். மாறியது எது? வீடா, தம் மனமா? என்ற புதிர் மனத்தில் எழுந்தது.

சாப்பாட்டிற்குப் பின் பெரியவன் தனியாகத் தாயாரைச் சந்தித்து, "எனக்கு அன்னை புரியாது, புரியவும் வேண்டாம். என்ன செய்ய வேண்டும் எனச் சொல்லுங்கள். செய்கிறேன். பெரிய இடங்களில் அப்பாவுக்குச் சரியாக நடக்கத் தெரியவில்லை. எவரும் அதைப் பொருட்படுத்துவதில்லை" என்றான். இது தர்மசங்கடம். இவருக்கோ, இவர் குடும்பத்திற்கோ பழக்கம் போதாது, மிக மட்டம். நான் எப்படி அவரைத் திருத்த முடியும்? பிள்ளைகள் அவர்போல இருக்கிறார்கள். மானம் போகிறது. அதுவே அவர்கட்குத் தெரியவில்லை. நல்ல பண்பான பழக்கங்களையே பார்க்காதவர்கள், எப்படி இதைப் புரிந்து கொள்ள முடியும்?

அன்னையை ஏற்றபின் தமக்கு ஆதாய மனப்பான்மையிருப்பது தமக்குத் தெரியாததுபோல் அவர்களிருக்கிறார்கள். இதற்கு வழியுண்டா? என்றால் தத்துவம் புரிகிறது. நடைமுறையில் தாம் தம் நிலைக்குக் கூனிக்குறுகினால் அவர்கள் மாறலாம். **வெட்கம் வரவில்லை. வெட்கம்கெட்ட நிலை தன்னுடையது**, என்பது மட்டும் மனைவிக்குப் பளிச்சென்று தெரிகிறது.

இரண்டு நாள் கழித்து பார்ட்னருடைய குடும்பத்திலிருந்து அழைப்பு வந்தது. அவர்கள் இங்கு வரப் பிரியப்பட்டனர். இது மீண்டும் பெரிய விஷயம். ஆனால் எத்தனை தரம் மானம் போகும், எப்படிப் பையன்கள், பெண், கணவர் மானத்தை வாங்குவார் என பயமாயிருந்தது. அவர்களும் வந்தனர், இந்தக் குடும்பமும் போயிற்று. எவரும் முயன்று மானத்தை வாங்கவில்லை. பார்ட்னருக்கும் அவர் குடும்பத்திற்கும் நம் குடும்ப நிலை நன்றாகத் தெரிந்தும் அதைப் பொருட்படுத்தாமல், மேலும் நெருங்கிவர முயன்றனர். அது அன்னையின் பேரருள். வந்துவிட்டது. காப்பாற்ற முடியுமா? தெரியவில்லை.



இரண்டு விசிட் முடிந்தபின் பலநாட்கள்வரை அவற்றைப் பற்றி வீட்டில் எந்த நேரமும் பேச்சு.

பெரியவன் : பார்ட்னர் பிள்ளைகள் எல்லாம் அமைதியானவர்.

பெண் : பண்பானவர் என்று கூறலாம்.

சிறியவன் : எதுவானாலும், அண்ணா போல் பேசக்கூடியவர்கள் இல்லை.

பெண் : அவர் மனைவி கலகலப்பாக இருக்கிறார்.

கணவன் : அவர் மனைவி மலை போலிருக்கிறார், எதற்கும் அசையமாட்டார் போலிருக்கிறது.

மனைவி : அவர்கள் பிறந்த ஊருடைய தன்மையது. அந்த ஊர், அந்த ஜில்லாவிலேயே எவரும் அதிர்ந்து பேசமாட்டார்கள்.

பெரியவன் : எங்களுக்குத் தெரியாத பூகோளம் தமிழ்நாட்டைப் பற்றி உங்களுக்கு எப்படியம்மா தெரியும்?

மனைவி : எங்கள் சொந்த ஊரிலிருந்து அவர்கள் ஊரில் சம்பந்தம் செய்தார்கள். மிகவும் நல்ல மனிதர்களாக இருந்ததால், தொடர்ந்து பல சம்பந்தங்கள் நடந்தன. அதனால் தெரியும்.

பெண் : அம்மா, அவரைப் பற்றிச் சொல்லுங்க அம்மா.

பெரியவன் : அம்மாவைக் கேட்காதே, நான் சொல்கிறேன். நான் அவருடன் பேசிக்கொண்டிருந்தபொழுது எதிர்வீட்டுக் குழந்தை வந்தான். அவன் என்னுடன் பேச ஆரம்பித்தான். "டேய் சீனு, நான் மாமாவுடன் பேசும் பொழுது தொந்தரவு செய்யாதே, அப்புறம் வா" என்றேன். அவர் சிரித்தார். சீனு அவரிடம் போனான். சற்று நேரம்

பேசினார். "எங்கள் வீட்டிற்கு வருகிறாயா" என்றார். சீனு போய் தன் தாயாரிடம் உத்தரவு கேட்டான். பின்னாலேயே இவரும் போனார். அவர்கள் மகிழ்ந்துவிட்டார்கள். சீனுவை அழைத்துப்போய் மீண்டும் கொண்டுவந்து விடுவதாகச் சொன்னார்.

கணவன் : இதெல்லாம் எனக்குத் தெரியாதே.

சிறியவன் : உன்னைப் போல "போ, அப்புறம் வா"ன்னு சொல்லாத மாமா, நல்லவர் போல இருக்கிறது.

கணவன் : எனக்கெல்லாம் அப்படித் தோன்றாது. நானும் பெரியவன் போலப் பேசுவேன்.

பெண் : நாமெல்லாம் அவர்களைப்போலப் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும்.

சிறியவன் : அவர்களைப்போலப் பேசுவது வேறு. நம்மைப்போல் பேசாமலிருக்க வேண்டும்.

கணவன் : இதெல்லாம் என்ன விஷயம், எனக்கு விளங்குவது போல் சொல்லேன்.

பெரியவன் : அப்பா, அம்மாவைக் கேட்காதீர்கள். நான் சொல்கிறேன். நாமெல்லாம் பண்பற்ற மனிதர்கள் uncultured people. இனி பழக, பேசக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பெண் : இதென்ன, இன்று புதிய பாஷை கேட்கிறது.

பெரியவன் : இந்த பார்ட்னர்ஷிப் வந்தபின் பெரிய இடங்களில் பழகுவதால், நாமெல்லாம் மட்டம் எனப் புரிகிறது.

கணவன் : உன் அபிப்பிராயம் என்ன? அம்மா பேசட்டும்.



பெரியவன் : நான் காலேஜில் படிக்கும்பொழுது எல்லோரும் நம்ம ஊர் பிள்ளைகளை uncultured பண்பற்றவர், பேசத் தெரியாதவர் எனக் கேலி செய்வார்கள்.

பெண் : அவர்கள் எல்லாம் பெரிய இடத்துப் பிள்ளைகளா?

தாயார் : பெரிய இடம், சின்ன இடம் என்பதில்லை. ஊரைப் பொருத்தது பழக்கம்.

கணவன் : நீ, உன் அபிப்பிராயத்தைச் சொல், அன்னை என்ன சொல்லியிருக்கிறார்கள்.

தாயார் : அருள் கொடுப்பதை, பண்பு பெற்றுக்கொள்ளும் எனப் படித்திருக்கிறேன்.

பெரியவன் : நான் சொல்றேனப்பா. ஹாஸ்டலிலிருந்து நான் வீட்டிற்குப் பொய்யாகக் கடிதம் எழுதினால், என் நண்பர்கள் ஆச்சரியப்படுவார்கள். எப்படி அப்பாவிடம் பொய் சொல்கிறாய் என்பார்கள். நமக்குப் பொய் சொல்வது சகஜம். அவர்கள் அப்படிப் பொய் சொல்வதில்லை. அதனால் நம்மை மட்டமாக நினைப்பார்கள்.

பெண் : மட்டமாகக் கேலி செய்வார்களா?

பெரியவன் : அப்படிக் கேலி செய்யமாட்டார்கள்.

சிறியவன் : "பண்பானவர்கள் கேலி செய்யமாட்டார்கள்" (என அண்ணன் மனதில்படும்படிச் சொன்னான்).

பெரியவன் : டேய், நீ என்ன சொல்றே என எனக்குத் தெரியும். நான் சொல்லும் நண்பர்கள் இதுபோல் சொல்லிக்காட்ட மாட்டார்கள்.

சிறியவன் : நான் உனக்குத்தானே தம்பி, அவர்களுடன் பிறந்தவன் இல்லையே. ஏதாவது கேட்டால் கொடுக்கப் பிரியமில்லை என்றால் இல்லை என்பது நம் வழக்கம்.

பெரியவன் : காலேஜில் நான் கூறும் நண்பர்களிடம் அப்பழக்கங்கள் இல்லை.

சிறியவன் : நம்ம வீட்டுப் பழக்கங்களில்லை என்கிறாயா?

கணவர் : அருள் கொடுப்பது பலிக்க பண்பு வேண்டுமா? நான் திறமை வேண்டும் என நினைத்தேன். அம்மாதான் நமக்கெல்லாம் பண்பு சொல்லிக்கொடுக்க வேண்டும்.

பெண் : ஏம்பா, அம்மாவைச் சொல்கிறீர்கள்?

கணவர் : நான் கேலியா பேசலை. பெரியவன் சொல்வதைப் போலிருப்பது அம்மாதான். அதனால் அப்படி நினைக்கிறேன்.

சிறியவன் : பக்குவமில்லாத இடத்தில் நல்லது வாராது என்பது எளிமையான விஷயம்தானே.

பெரியவன் : எல்லாம் சங்க இலக்கியம் சொன்னதுதான்.

பெண் : நமக்குத் தமிழ்ப் பண்பில்லை என்றாகிறது.

அம்மா : அன்னைக்கு உயர்ந்த பண்பு தேவையானால், அதைக் கற்பது நல்லதுதானே.

பெரியவன் : நாம் பேசுவதெல்லாமே மட்டம் என்று ஹாஸ்டலில் சொல்வார்கள்.

அம்மா : அதெல்லாமிருக்கட்டும். இந்த பார்ட்னருக்குத் தகுந்தவாறு நடக்கவேண்டும்.



பெரியவன் : இப்போ பார்ட்னர்தான் ‘அன்னை’.

சிறியவன் : பணம்தான் அன்னை.

பெண் : சரி, பணத்திற்காகவாவது நல்ல பழக்கம் கற்றுக் கொள்ளலாம்.

சிறியவன் : அண்ணன்கிட்டே சொல்லு.

போன் மணியடித்தது. அம்மா எழுந்தார்கள். பெண், தான் போய் பேசுவதாகச் சொன்னாள். சுமார் 10 முறை மணி அடித்துவிட்டது போனை எடுப்பதற்குள்.

தாயார் : பிறர் நோக்கில் அறிவது சத்திய ஜீவியத்தை நோக்கிப் போவது என்றால், யாரும் போனை எடுக்கவில்லை என்றால் கூப்பிட்டவர் மனம் எப்படியிருக்கும்?

கணவர் : எங்கள் ஆபீஸில் போனுக்கு பதில் சொல்வது வழக்கம் இல்லை. அப்படிச் சொன்னால் அது அதிசயம்.

பெரியவன் : 3 முறை அடித்தபிறகு எடுக்காவிடில் எங்கள் ஆபீசில் memo கொடுப்பார்கள்.

சிறியவன் : இனி ஒரு முறை மணியடித்தவுடன் நான் போனை எடுக்கிறேன்.

☆ ☆ ☆

ஒரு வாரம் கழித்து கணவர் வாட்டமாக வந்தார். மனைவியிடம் பேசினார். பார்ட்னர் நேர்மையானவர். பணம் கொடுத்து காரியம் சாதிக்க வேண்டுமானால், அதை விட்டுவிடுவார். இந்த லைசென்ஸ் சர்க்கார் உத்தரவாகி கையெழுத்தாகிவிட்டது. அந்த ஆபீசர் பணம் வாங்குவதற்குப் பேர்போனவர். அவர் பார்ட்னரிடம் ஆர்டரில் தான்

கையெழுத்திட்டதைக் காட்டி, பணம் வந்தால் ஆர்டர் வரும் என்கிறார் என்று சொன்னார்.

மனைவி : இது பெரிய தொகையாயிற்றே. லஞ்சம் அதிகமாக எதிர்பார்ப்பார்களே.

கணவன் : அதற்கெல்லாம் ரேட் ஏற்பட்டுவிட்டது. பெரிய ரூபாய் அதிகமாக எதிர்பார்க்கிறார். லைசென்ஸ் வாராது போலிருக்கிறது.

மனைவி : பார்ட்னர் என்ன சொல்கிறார்?

கணவன் : அன்னை என்ன சொல்கிறார் எனக் கேட்க வந்தேன்.

மனைவி : நாமெல்லாம் ஒரு நல்ல முடிவுக்கு வந்தால், காரியம் கூடிவரும்.

கணவன் : குழந்தைகளை நினைக்காதே, நாம் செய்யக்கூடியது உண்டா?

மனைவி : உண்டு.

கணவன் : சொல்லேன்.

மனைவி : சத்தியம் ஜெயிக்கும்.

கணவன் : என்னைப் பொய் சொல்லாதே என்கிறாயா? நானே அதை நினைத்தேன். அது எப்படி முடியும்? ஏதாவது முடியக்கூடியதாகச் சொன்னால் நல்லது.

மனைவி : லைசென்ஸ் நம் கையிலிருக்கிறது.

கணவன் : பார்ட்னரிடம் என்ன சொல்ல? அவர் பொய் சொல்லாதவர். அதெல்லாம் லைசென்ஸ் விஷயத்தில் பலிக்காது.



மனைவி : அவர் அன்னையை ஏற்றால் கிடைக்கும்.

கணவன் : நாமெப்படிச் சொல்வது?

மனைவி : நாம் சொல்லக்கூடாது.

கணவன் : 3 நாள் பிரார்த்தனை செய்யட்டுமா?

மனைவி : இது பிரார்த்தனைக்கு அசையாது.

கணவன் : பிரார்த்தனைக்குப் பலனில்லாமலிருக்குமா?

மனைவி : பலனில்லாமல் போகாது. வேறு பலன் வரும்.

கணவன் : லைசென்ஸுக்கு வழி சொல்லு. புஷ்பாஞ்சலி செய்யலாமா? காணிக்கை தரலாமா?

மனைவி : அதெல்லாம் வேறு நல்லது நடக்கும், லைசென்ஸ் கிடைக்காது.

கணவன் : என்ன செய்தால் லைசென்ஸ் வரும்?

மனைவி : மெய் மட்டும் சொன்னால் வரும்.

கணவன் : ஏன் அதையே திரும்பத்திரும்ப சொல்கிறாய்?

மனைவி : நம்ம நிலைக்கு நம்ப பையனுக்கு இந்த projectஇல் ஒரு வேலை கிடைத்தால் அதிர்ஷ்டம். Project நமக்கு வந்திருக்கிறது.

கணவன் : எப்படி வந்தது?

மனைவி : மெய் மட்டும் சொல்வதால் வந்தது.

கணவன் : நம் வீட்டில் யார் மெய் சொல்கிறார்கள்?

மனைவி : நாம் அன்னையை ஏற்றுக்கொண்டிருப்பது மெய் அல்லவா? அதற்காக வந்தது.

கணவன் : அப்படியா? அப்போ இந்த projectஇல் பொய் சொல்லக் கூடாதுதான்.

மனைவி : அதுவரை முடிவெடுத்தாலும் நல்லது.

கணவன் : அது முடியும். Project வரை பொய் சொல்லாமலிருக்க முடியும். முழுவதும் முடியாது.

பார்ட்னர் வரச் சொல்வதாக ஆள் வந்தான். கணவர் போனார். பார்ட்னர் இரண்டில் ஒன்று முடிவு செய்யவேண்டி I.A.S. ஆபீசரைப் பார்க்கப் போனாராம். அவர் லீவில் போயிருக்கிறார். இன்று அவரிடத்திலிருந்தவர் காசே வாங்காதவர். ஆர்டரைக் கையில் கொடுத்துவிட்டார் என்ற செய்தியுடன் திரும்பினார்.

கணவர் : என் முடிவுக்கு இந்த அளவு சக்தியுண்டு என நினைக்கவில்லை. இந்த மதர் விஷயம் நமக்கு ஒத்துவாராது போலிருக்கிறது. பொய் எப்படிச் சொல்லாமலிருப்பது? இன்னும் என்னென்ன வருமோ? சாமியைக் கும்பிடலாம். Discipline வேண்டாம். இது நீடிக்குமா எனத் தெரியவில்லை.

மனைவி : பார்ட்னர் என்ன சொன்னார்?

கணவன் : ‘‘என்னை எப்பொழுதுமே சத்தியம் - கடவுள் - கைவிட்டதில்லை என நான் அறிவேன்’’ என்றார். எனக்குப் பொய் சொல்லித்தான் சாதித்துப் பழக்கம்.

ஏதோ முக்கியமான விஷயம் என பிள்ளைகள் தூர இருந்தார்கள். பிறகு வந்தார்கள். தகப்பனார் சுருக்கமாக, “லைசென்ஸ் சிரமமாய்விட்டது. அன்னை வாங்கிக் கொடுத்தார்’’ என்றார்.



நடக்காது என்பதில்லை என்று பிள்ளைகள் எதிர்பார்ப்பதால், இது நடந்தது பெரிய காரியமாக அவர்கட்குத் தோன்றவில்லை.

மகள், தாயார் ஓய்வாக இருக்கும்பொழுது அன்னையைப் பற்றிப் பேசவந்தாள். பெரியவனும், சிறியவனும் ஓடிவந்து, ‘‘என்னமோ நடக்கிறது, என்ன இரகஸ்யம் பேசுகிறீர்கள்’’ என்று கேட்டார்கள்.

பெரியவன் : நானும் பார்க்கிறேன், கொஞ்ச நேரமிருந்தால் அம்மாவும், பெண்ணும் சேர்ந்து பேசுகிறார்கள்.

சிறியவன் : என்னமோ plan போடுகிறார்கள். தமிழ்நாட்டை ஆளப் போகிறீர்களா?

பெண் : அவன் போறான், நான் கேட்பதற்குப் பதில் சொல்லம்மா. என் சிநேகிதி அக்காவை புருஷன் கைவிட்டுவிட்டான். நான் அவளுக்கு உதவி செய்யமுடியுமா?

சிறியவன் : இந்த ஊர்க்கதையெல்லாம் எனக்கு வேண்டாம், நான் போகிறேன்.

பெரியவன் : நானும் போகிறேன், பாக்டரியில் வேலையிருக்கு.

தாயார் : நீ சின்னப் பெண். நீ சொல்வதை எவரும் ஏற்க மாட்டார்கள்.

பெண் : அவள் என்னைக் கேட்டாள். எந்த தெய்வத்திற்குப் பிரார்த்தனை செய்தால் பலிக்கும் எனக் கேட்டாள்.

தாயார் : அது சொல்வது எளிது.

பெண் : கல்யாணத்தில் ஏராளமான கோளாறு. கேட்கவே பயங்கரமாக இருக்கிறது. பணம் முக்கியத் தகராறு. மாப்பிள்ளைக்கு ஏற்கனவே ஒரு பெண் வேண்டியவளாம்.

தாயார் : கோளாறு எவ்வளவிருந்தாலும் பரவாயில்லை. சிநேகிதியின் அக்கா அன்னையைக் கூப்பிட்டால் வழி பிறக்கும்.

பெண் : அவளுக்கு வாழ்க்கை அமையுமா அம்மா? என் தோழி மனம் உடைந்து போயிருக்கிறாள்.

பெண்ணை யாரோ தேடுவதால் எழுந்து வெளியில் போய் 15 நிமிஷம் கழித்து வந்தாள். தாயாரிடம் ஆச்சரியமாகப் பேசினாள். அவள் சிநேகிதி வந்தாள். மாப்பிள்ளை தானே வீட்டிற்கு வந்ததாகவும், தகப்பனாரைச் சந்தித்துப் பெண்ணை அழைத்துப்போக அனுமதி கேட்டதாகவும், மன்னிப்புக் கேட்கும்தொனியில் பேசியதாகவும் கூறிவிட்டு ஓடிவிட்டாள். "நான் கஷ்டப்படுவது உனக்குக் கஷ்டம். அதனால் உடனே உனக்குச் செய்தி சொல்ல ஓடிவந்தேன்" என்றாளாம்.

தாயார் : நினைத்த மாத்திரம் செயல்படும் தெய்வம் அன்னை.

பெண் : இது எப்படி அம்மா? நான் அந்தப் பெண்ணிடம் பேசவும் இல்லையே.

தாயார் : Receptivity என்பது பெரியது. உன் சிநேகிதி குடும்பம் நல்லவர்கள், பண்பானவர்கள். அதனால் உடனே பலிக்கிறது.

பெண் : மாப்பிள்ளை அவளை அழைத்துப் போவதற்குமுன் நான் போய் பார்த்து வருகிறேன். ஏம்மா, இது இப்படி க்ஷணத்தில் நடக்கிறது? நம் எதிர்வீட்டில் வந்த கல்யாணத் தகராறு 2 வருஷமாக அப்படியேயிருக்கிறது. என் சிநேகிதி அன்பரில்லையே. எதிர்வீட்டார் அன்பராயிற்றே.

தாயார் : எதிர்வீட்டார் குப்பையாக வீட்டை வைத்திருக்கிறார்கள். வீட்டில் சண்டை அடிக்கடி போடுவதால் சுமுகம் இருக்காது. அதனால் அன்னை செயல்படமுடியாது.



பெண் : நாம் சொல்லக்கூடாதா?

தாயார் : சொன்னால் சண்டை வரும். நீங்கள்தான் அன்பரா? நாங்களில்லையா? ரொம்ப உயர்வு என்ற நினைப்பா? எனக் கேட்பார்கள்.

பெண் : நீங்கள் ஏதோ எங்களுக்கெல்லாம் சொல்ல நினைக்கிறீர்கள். ஆனால் சொல்லவில்லை எனத் தோன்றுகிறது.

தாயார் : நான் செய்யாததை உங்களுக்கு எப்படிச் சொல்வது?

பெண் : நீங்கள் செய்யாவிட்டால், நாங்கள் செய்யக்கூடாதா? நீங்கள் பாட்டு கற்றுக்கொள்ளவில்லை. எனக்குச் சொல்லிக் கொடுக்கவில்லையா?

தாயார் : பாட்டு மாதிரி அன்னை வாராது.

பெண் : என்ன என்று எனக்குச் சொல்லக்கூடாதா?

தாயார் : பாக்டரி பெரியது, வந்துவிட்டது. அதுவும் போனது மீண்டும் வந்தது. இனி நிச்சயம் பலிக்கும். அது குறைந்தபட்சமாகயிருக்கும். அதிகபட்சமாக்கலாம், அதைச் சொல்ல முடியவில்லை.

பெண் : என்ன செய்தால் அதிகபட்சம் வரும்?

தாயார் : நாம் அனைவரும் மனத்தால் அதிகபட்சம் அன்னையை ஏற்க முயன்றால் அது நடக்கும்.

பெண் : ஒரு உதாரணம் சொல்லம்மா?

தாயார் : நாம் பேச உட்கார்ந்தபொழுது இரண்டு பேரும் கேலி செய்தார்கள்.

பெண் : கேலி செய்யக்கூடாதா?

தாயார் : செயல் முக்கியமில்லை. மனநிலை - நினைப்பு - முக்கியம்.

பெண் : ஏன் அவர்கள் நினைப்பு சரியில்லையா?

தாயார் : கேலி, ஹாஸ்யம், கிண்டல், நகைச்சுவை எல்லாம் humour என்ற தலைப்பில் வரும். அதுவே வாழ்வின் சாரம் என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.

பெண் : பின் ஏன் நீங்கள் அப்படிச் சொல்கிறீர்கள்?

தாயார் : கிண்டலுக்கு ஒரு போக்கில்லையா?

பெண் : எனக்கு ஒன்றும் தப்பா தோன்றவில்லையே. அவனே வருகிறான், கேட்போம் — ஏன் எங்களைக் கிண்டல் செய்தாய்?

சிறியவன் : என்னமோ எனக்கு வேட்டு வைப்பதாக நினைத்தேன்.

பெண் : வேட்டு வைக்க என்னயிருக்கு? என்னை வேட்டு வைப்பவளாக நினைக்கின்றாயா?

பெரியவன் : நீங்கள் என்ன பேசுகிறீர்களோ, எனக்குத் தெரியாது. நீங்கள் இருவரும் சேர்ந்தால் எனக்கு சந்தேகம் வருகிறது.

தாயார் : அம்மா, நான் இந்த நினைப்பைத்தான் சொல்கிறேன். இது தவறு.

சிறியவன் : எது தவறு, நீங்கள் பேசுவதா? நான் கேட்டதா?

இருவரும் வெளியில் போகிறார்கள்.



பெண் : ஏதோ அர்த்தமில்லாமல் உளறுகிறார்கள். அவர்கட்கு உங்கள்மீது சந்தேகப்பட என்னயிருக்கிறது? ஏன் அதைத் தவறு என்கிறீர்கள்?

தாயார் : அன்னை என்பது உயர்ந்த மனநிலை. சந்தேகப்படுவது உயர்ந்த மனநிலையன்று. எப்படிப் பலிக்கும்?

பெண் : சந்தேகப்படுவது தாழ்ந்த மனநிலையா? எப்படி மாறுவது?

தாயார் : நீ மாறுவதைப் பற்றிக் கேட்கிறாய். இப்படிப் பேசுவது தவறு என இருவரும் ஏற்பார்களா?

பெண் : நீங்கள் ஏன் திருத்தக்கூடாது? உங்கள் பிள்ளைகள் தானே? அப்பா இப்படித்தானே பேசுகிறார். இதுதானே நம்ம பழக்கம்.

தாயார் : அன்னை சக்திவாய்ந்தவர் என்பதை அறியவேண்டும்.

பெண் : அதை நாடவேண்டும்.

தாயார் : நாடினால் பலன் உண்டு. சக்திவாய்ந்த அன்னையை சக்திக்காக நாடாமல், பக்திக்காக நாடுவது பவித்திரம்.

பெண் : தலைகீழே மாற்றிப் பேசுகிறீர்களே.

தாயார் : சக்திக்காக அன்னையை நாடுவது ஆதாய மனப்பான்மை.

பெண் : அதில்லை என்றால் வேறு எதற்காக அன்னையை நாடவேண்டும்?

தாயாருக்குப் பெண்ணின் எளிய ஆதாய மனப்பான்மை ஏமாற்றத்தைக் கொடுத்தது. அடுத்த நிமிஷம் அதுவே தன் மனநிலை என்பது நினைவு வந்தவுடன் வருத்தம் எழுந்தது. அதனால்

உணர்ச்சிபூர்வமாகப் பேச முடியவில்லை. கேள்விக்குப் பதில் வாயளவில் கூற முயன்றார்.

தாயார் : நாம் ஆதாயமாகவே நினைத்தால் வாழ்க்கை எப்படி நடக்கும்?

பெண் : வேறு எப்படியிருக்க வேண்டும் என்கிறீர்கள்?

தாயார் : பெற்றோர் பிள்ளைகளை அன்பாக வளர்க்காவிட்டால், எப்படி வளரும்?

பெண் : நாளைக்குச் சம்பாதிப்பான் என்றுதானே வளர்க்கிறார்கள்.

தாயார் : பெண்ணை எப்படி வளர்ப்பது?

பெண் : அது கடமை.

தாயார் : கடமை எதிலிருந்து வருகிறது?

பெண் : ஆமாம், அன்பில்லாமல் கடமை செயல்பட முடியாது.

தாயார் : அதுவே நாம் அன்னையை வழிபடும் சட்டம்.

பெண் : எந்தச் சாமிக்கும் இல்லாத சக்தியிருப்பதால் நாம் அன்னையிடம் வந்திருக்கிறோம். இதில் கடமை, அன்பு ஏது?

தாயாருக்கு மண்டையில் அடித்தாற்போலிருந்தது. தன் பெண்ணின் அப்பாவி மனப்பான்மையின் ஆதாயத்தை நினைக்க வெட்கமாக இருந்தது. தானும் அப்படியிருப்பது அந்த நேரம் மீண்டும் மறந்துவிட்டது. இந்த நன்றிகெட்ட உலகை மனமார நிந்தித்தாள். மேலே பேச வாய் வரவில்லை. பெண் பதில் எதிர்பார்க்கிறாள். உள்ளபடி எதிர்பார்க்கிறாள். சுயநலமாக மட்டும் வாழ்வது சரி என்ற பெண்ணின் மனப்பான்மை மனத்தை உறுத்தியது.



தாயார் : நீ ஏன் உன் தோழியின் அக்காவுக்கு உதவ நினைத்தாய்?

பெண் : என் தோழிமீது எனக்கு ஆசை.

தாயார் : ஆதாயமில்லாத ஆசைக்கு அன்பு, இலட்சியம் எனப் பெயர்.

பெண் : அதை எப்படி அன்னையிடம் செலுத்துவது?

தாயார் : தோழிமீது ஆசைப்படுவதைப்போல் அன்னையின் தெய்வாம்சத்தை அறிந்து அன்னைமீது எழும் அன்புக்கு பக்தி எனப் பெயர்.

பெண் : எனக்கு அப்படிப்பட்ட பக்தியில்லையே.

தாயார் : இல்லாவிட்டால் பெற முயலக்கூடாதா?

பெண் : அது எதற்கு?

தாயார் : அது மட்டும் உலகில் நல்லது.

பெண் : அதனால் பாக்டரி பலிக்கும் என்றால் செய்யலாம்.

தாயார் : பாக்டரி மனிதனுக்கு, அன்னை பக்தனுக்கு.

தொடரும்....

☆ ☆ ☆

## p.37 God found in Nature, Nature fulfilled in God.

**இயற்கையில் காணும் இறைவன், இறைவனைப் பூர்த்தி செய்யும் இயற்கை**

- **சாதனையின் சக்தி அவனிடம் தெரிகிறது.**
- **ஜீவனின் உச்சியில் குடியுள்ள வாழ்வு.**
- **அவன் மனமும், ஆன்மாவும், இதயமும் ஒரே சூரியனானார்கள்.**
- **வாழ்வின் அடிமட்டம் மங்கலாயிருந்தது.**
- **நிலையற்ற வாழ்வின் நிழலிலும் தீக்கனல் ஆர்வமாக எழுந்தது.**
- **இறைவனின் வலிமை இருளில் செயல்பட்டது.**
- **அசைவற்ற அமைதியின் சாட்சியான பார்வை.**
- **போராடும் இயற்கையும் ஒளியில் புகலிடம் தேடிற்று.**
- **அற்புதத்தின் மின்னல் அடுக்கடுக்காகத் தெறித்தது.**
- **தழலும், கனலும் அனுபவத்தின் அத்தியாயங்கள்.**
- **கப்பலெனும் கடவுளை, காற்று எனும் ஆடை சூழ்ந்தது.**
- **ஜடத்தின் அசலனம் ஞானத்துடன் உரையாடிற்று.**
- **புதுயுகத்தின் புதுமைகள் காணாத காத தூரத்தினின்று வந்தன.**
- **எண்ணமற்ற சூன்யத்தில் அறிவின் அற்புதம் உதித்தது.**
- **ஒளிமயமான சக்தி, ஆனந்தம் வெள்ளமாகப் பொழிந்தன.**
- **புதிரின் புதருக்குள் புது மழை புகுந்தது.**

அமைதியான ஆத்மா அசைவற்று உறங்குவதாகும். அது பெறும் அசைவு பரிணாமம். அசைவு பரிணாமத்தால் சக்தியாகி மிளிர்கிறது.



மனமும், ஆன்மாவும், இதயமும் ஒரே சூரியனில் ஒன்றாகின்றன. மனமும், இதயமும் பிரிந்து நிற்பது இரண்டாம் அறியாமை. அதைக் கடந்த நிலையில் ஆத்மா விழித்தெழுந்து அவற்றுள் கரைந்து ஜோதியாகி, சூரியனாகின்றன. மனத்தின் அடியிலுள்ள ஜோதியும், இதயத்தின் அஸ்திவாரத்தின் ஒளியும் ஆத்மாவின் காயத்திரியே ஆகும். அவை எழுந்து கலந்த சூழல் பரிணாமத்திற்குரிய சூழல். அறிவு பிறர் கோணத்தில் காணும்பொழுது, இதயம் பரநலத்தைப் பாராட்டும்பொழுது, அவற்றுள் உள்ள ஆன்மா அசைகின்றன. அசைவு ஜோதி, பரிணாம ஜோதி. பரிணாமம் பல கரணங்கட்கும் உள்ளது என்பதால், அவை கலந்து எழுந்து ஜோதி சூரியனாகிறது.

☆ ☆ ☆

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உடலிலும், உணர்விலும் நிறைந்து செறிந்த வலிமையே பாதுகாப்பு.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

எதிர்காலத்தில் நடக்கக்கூடியவற்றை அறிவது கற்பனை. நடக்கக்கூடாதவற்றை எண்ணித் திருப்திப்படுவது கற்பனைக் கோட்டை.

*கற்பனைக் கோட்டை கற்பனையில்லை.*

**"அன்பர் உரை"**

## சத்திய ஜீவன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

*(ராணிப்பேட்டை தியான மையத்தில் 21.2.2002 அன்று திருமதி. வசந்தா லக்ஷ்மிநாராயணன் நிகழ்த்திய உரை).*

சத்திய ஜீவன் ஓர் ஆன்மீகப்புருஷன். ஒவ்வொரு மனிதனிலும் உருவம் பெற்ற பகுதியும், உருவம் பெறாத பகுதியும் உண்டு. உருவம் பெற்ற மனிதனின் பின் சுபாவம் ஒளிந்திருக்கும். சத்திய ஜீவன் என்பது ஒரு ஜோதி, பிரவாகமான சக்தி, அது அளவிற்கு உட்பட்டதன்று. இருப்பினும் அவன் ஒரு ஜீவன், அவனே புருஷன்.

சத்திய ஜீவன் அனந்தமான பிரபஞ்ச ஜீவன். அவனுக்கேயுரிய ரூபத்தின்மூலம் அவனுள் ஒளிந்திருக்கும் காலத்தைக் கடந்த புருஷன் எட்டிப் பார்ப்பான். தனி மனிதன் என்பது ஓர் அடையாளம். நெற்றியிலிட்ட குங்குமம், விபூதி, நாமம் போன்றது. அதுவே முழு மனிதனன்று. சத்தியஜீவிய மனிதனின் ஜீவியம் அனந்தமான ஜீவியம். அவனுள் சத்தியம் புதைந்துள்ளது, சத்தியமே அவனுக்குச் சுபாவம்.

சத்திய ஜீவன் சத்தியத்தின் அடிப்படையில் சத்தியத்தை வெளிப்படுத்துவான். அவனுக்கு நன்மை, தீமை என்பது கிடையாது. அவன் சட்டத்திற்குட்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆன்மீகச் சுபாவம் ஆற்றொழுக்காக அவன்மூலம் வெளிப்படும்.

மனித வாழ்விற்கும், ஆன்மீக வாழ்விற்கும் அடிப்படையான வித்தியாசம் ஒன்று உண்டு. மனித வாழ்வு சட்டத்திற்குட்பட்டது. சட்டம் பல வகையானது. சமூகத்திற்குரிய சட்டம், குடும்பத்திற்குரிய கட்டுப்பாடு, மனசாட்சிக்கு அடங்கும் பாங்கு, தர்ம நியாயத்தை



ஏற்கும் தன்மை ஆகியவை எந்த நேரமும் வாழ்வை ஆட்சி செய்யும். ஆன்மீக வாழ்விற்கு அடிப்படைச் சுதந்திரம் சட்டம் அன்று. சமூகத்தில் வாழ்ந்தாலும் பக்தனுடைய வாழ்விற்கு சமூகம் கட்டுப்பட்டது, சமூகத்திற்கு பக்தன் கட்டுப்பட்டவன் அல்லன். சமூகத்தைப் பொருத்தவரையில் அவனுக்கு சுதந்திரம் உண்டு. குடும்பத்தின் ஒழுங்கு ஆன்மீக நிர்ணயத்திற்கு உட்பட்டது என்பதால் அவனுக்குக் குடும்பத்தைப் பொருத்தும் சுதந்திரம் உண்டு. (**ஆன்மீக வாழ்வின் தர்மம் யுகதர்மம்**). அது தர்ம நியாயங்களைக் கடந்தது. அதனால் அங்கும் அவனுக்குச் சுதந்திரம் உண்டு. சுதந்திரம் என்பது ஆன்மாவின் சட்டம். சமூகம், குடும்பம், மனசாட்சியைப் பொருத்தவரையில் எந்தச் சட்டமும் ஆன்மீக வாழ்வைக் கட்டுப்படுத்தும்.

வாழ்விலுள்ள நல்லது, கெட்டது என்ற பிணக்கு அவனுக்கு இல்லை. நல்லதை நிர்ணயிக்கும் சட்டம் வாழ்வில் கெட்டதைக் கட்டுப்படுத்த வேண்டும். அது ஆன்மீக வாழ்வில் இல்லை. சத்தியஜீவிய வாழ்வின் சுபாவம் பரிபூரணச் சுதந்திரம் உடையது, சுயமான ஒழுங்கு உடையது, தானே பலன் தரத்தக்க அளவில் செயல்படக் கூடியது. தனக்கு வேண்டியதைத் தானே சிருஷ்டித்துக்கொள்ளக் கூடியது. நம்மைப்போல் சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கக் கூடியதன்று.

சத்திய ஜீவன் உலகத்தோடு சுமுகமாக இருப்பான். மற்ற சத்திய ஜீவன்களுடன் சுமுகமாக இருப்பான். ஈஸ்வரனுடைய சத்தியத்துடன் சுமுகமாக இருப்பான். அவனுடைய செயல்கள் அனைத்தும் ஒன்று என்ற இடத்திலிருந்து புறப்படும். பிரிந்து நிற்கும் அகந்தையில் இருந்து உற்பத்தியாவதில்லை.

மனம் குறுகி இறுகியது. அதனுடைய பாதுகாப்பிற்கு அது தேவை. சத்திய ஜீவன் பரந்து விரிந்த அனந்தமான சுதந்திரம் உடையது. அதற்குக் குறுகவும், இறுகவும் முடியாது.

அனந்தமான ஜீவியத்தில் பிரபஞ்சத்திற்கும், பரமாத்மாவிற்கும் முரண்பாடு இல்லை. சத்திய ஜீவன் தன் வெளிப்பாட்டைத் தானே சுயமாக நிர்ணயித்துக் கொள்ளும். அவன் பிரபஞ்சம் முழுவதும் பரவி இருப்பான். சுற்றியுள்ள அறியாமையை அறிவான், அதனால் பாதிக்கப்படமாட்டான்.

அவனுடைய புருஷனும் பிரகிருதியும் ஒன்றாக இருப்பார்கள். இயற்கைக்கும், ஆத்மாவிற்கும் உள்ள முரண்பாடு, புருஷப் பிரகிருதிக்குள்ள முரண்பாடு அங்கு இருக்காது. ஈஸ்வரனுடைய சத்தியஜீவிய சக்தி தெய்வீகச் சுபாவமாக புருஷனின் வெளிப்பாடாக தன்னிச்சையாக வெளிப்படும்.

சத்திய ஜீவனில் ஞானம் அவனுடைய ஜீவியத்தில் சுயமாக எழுந்து வெளிப்படும். சத்தியஜீவிய சுபாவத்தில் அனந்தனுடைய செயல் தன்னைத்தானே நிர்ணயித்துக் கொள்ளும். இயற்கையிலுள்ள அனிச்சைச் செயலுக்குப் பதிலாக இது செயல்படும். மனம் ஒரு சட்டத்தால் செயல்படுகிறது. தன்னை அறியும் சத்தியம் சட்டத்தை மீறி தானே எழுந்து செயல்படுகிறது. அதன் செயலில் ஒவ்வோர் அசைவும் அணுவும் இதை வெளிப்படுத்தும்.

வாழ்வில் எண்ணமும், செயலும் பிரிந்துள்ளன; இங்கு அவை சேர்ந்து இருக்கும். சுதந்திரமும் ஒழுங்கும் பிரிந்துள்ளன, பிரிந்தவை பிணக்கு எழுப்பும்; இங்கு இணைந்து இருக்கும் பிணக்கு இருக்காது. சத்திய ஜீவனின் சுதந்திரம் ஒளியின் சுதந்திரம், இருளின் சுதந்திரம் அன்று. கைதிகள் விடுதலைக்குமுன் ஜெயிலுள் ஓரளவு சுதந்திரம் அளிக்கப்படுவார்கள், இது சிறையின் சுதந்திரம். இருளின் சுதந்திரம் அதுபோன்றது. ஒளியின் சுதந்திரம் நாட்டில் நமக்குள்ள சுதந்திரம் போன்றது. நாம் தவறு செய்து உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற அவசியம் உண்டு. சத்திய ஜீவனுக்கு அந்த அவசியமில்லை, தவறே இல்லாமல் உண்மையை நேரடியாக அவனால் அறிய முடியும்.



சத்தியஜீவியம் சிறியதைப் பெரியதாக்கும் சக்தி. அது பிரபஞ்சத்தினுடைய ஞானத்தைத் தனிப்பட்டவர்களுடைய வாழ்வில் விவரமாகச் செயல்படுத்தும் சக்தி. சத்தியம் அதன் பிறப்புரிமை. நம் மனம்போல் அது சத்தியத்தைத் தேடவேண்டிய அவசியம் இல்லை. சத்தியஜீவியம் செயல்படும்போது அதன் அங்கங்களுக்குள் பிணக்கு இருக்காது.

அகந்தைக்கும், வலிமையான அகந்தைக்கும் பிணக்கும், சச்சரவும் வாழ்வின் நிகழ்ச்சிகள். அது சத்திய ஜீவனுக்கில்லை, அவன் செயல் ஈஸ்வரனின் செயல். இங்கு ஜீவன் என்பது புருஷனுடைய ஜீவன். அதனால் சொந்த முயற்சிக்கும், இறைவனின் ஆணைக்குமிடையே எந்த நேரமும் பெரும் போராட்டம் இருக்கும். அது சத்திய ஜீவனுக்கு இல்லை.

சத்தியஜீவியத்தின் சுபாவம் மூலமாக தெய்வீக ஞானமும், சக்தியும் செயல்படும். அப்படிச் செயல்படும்பொழுது சுதந்திரத்தின் அடிப்படையில் செயல்படும். அந்தச் சுதந்திரத்தோடு உள்ள தொடர்பை அவன் எப்பொழுதுமே இழக்கமாட்டான். **இந்தத் தொடர்பு அவனுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கும்.** சட்டத்திலிருந்து சுதந்திரம், தர்மத்திலிருந்து சுதந்திரம் ஆகியவை இந்தத் தொடர்பிலிருந்து வருபவை. மனத்தின் அபிப்பிராயங்களுக்கு வேலையில்லை.

1. ***தன்னுள் உலகம் இருப்பதால் சுயநலம் என்பது இல்லை.***
2. ***செயல் என்பது பிரபஞ்சத்தின் அன்பும், ஐக்கியமும் வெளிப்படுவதாகும்.***
3. ***ரூபங்களிலும், சுபாவங்களிலும் உள்ள சத்தியத்தை வெளிப்படுத்தும் தெய்வீகக் கருணை சுமுகமான செயலுக்கு நோக்கமாகும்.***

சத்தியஜீவிய வாழ்வின் ஒரு முக்கியமான அம்சம் கருவிக்கும் ஞானம் ஏற்படும். ''கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்''

என்று சொல்வதுபோல், ஒரு மஹான் பயன்படுத்திய பொருளுக்குச் சக்தி இருக்கும் என்று சொல்வதுபோல், குரு பத்தினி குருவில் பாதி என்று சொல்வதுபோல் சத்தியஜீவியம் பயன்படுத்தும் கருவிகளுக்கும் சத்தியஜீவியம் உண்டு. சத்தியஜீவிய வாழ்வு அதனுடைய வெவ்வேறு நிலைகள் ஒளி பெற்று ஆனந்தம் அடைந்து அதன் ஜீவன் பூர்த்தியாகும். நமக்கு ஒரு கவலை இருக்கும்போது ஒரு சந்தோஷம் வந்தால், கவலையை மீறி சந்தோஷத்தை அனுபவிக்கிறோம். கவலை சந்தோஷத்தால் மாறி சந்தோஷமாவது இல்லை. சந்தோஷம் அடங்கியபிறகு கவலை மீண்டும் வரும். சத்திய ஜீவனுள் எழும் ஒளி ஜீவனின் பல நிலைகளையும் சென்று அடைந்து அனைத்தையும் ஒளிமயமாக்கும்.

சத்தியஜீவியத்தின் தன்மை இரண்டு,

1. **பிறப்பிலேயே தன்னை முழுமையாக அறியும்.**
2. **உலகம் தன்னை அறிவதுபோல் சத்திய ஜீவன் தன்னை அறிவான்.**

சத்தியஜீவியப் பரிணாமம் பல்வேறு நிலைகளில் உண்டு. ஆனால் எல்லா நிலைகளுக்கும் பொதுவான சுமுகம் உண்டு. ஒரு சர்க்காரில் ஒரே இலாக்காவின் பல ஆபீஸ்கள் சிறியது, பெரியது என்று இருந்தாலும், எல்லா ஆபீஸ்களுக்கும் பொதுவான சுமுகமுண்டு. வெவ்வேறு இலாக்காக்களில் ஒரே நிலையிலுள்ள ஆபீஸ்களுக்கு பொதுவாக எதுவும் இருக்காது, சுமுகத்திற்கு வழியில்லை.

தனி மனிதனுக்குள்ள சட்டமே, சமூகத்திற்குள்ள சட்டம். சத்தியஜீவிய சமூகம் என்று ஒன்று இருந்தால், தனி மனிதனைப் போலவே அதற்கும் அடிப்படையான நிலைமை சுமுகம்.

சத்தியஜீவிய சுபாவத்தில் வேறுபாடுகளை வாழ்வின் உண்மைக்குரிய வெவ்வேறு பகுதிகளாகக் கருதுவதால் அவை



அபரிமிதமான பலனைக் கொடுக்கின்றன. மக்கள் தொகை அதிகமாவது நாட்டில் உணவுப் பஞ்சம், தண்ணீர்ப் பஞ்சம் போன்ற எல்லாப் பஞ்சங்களுக்கும் அடிப்படை என்பதால் தொகையின் பெருக்கத்தை கட்டுப்படுத்துகின்றனர். **பஞ்சமான நாட்டில் பெருகும் ஜனத்தொகை பஞ்சத்தைப் பெருக்கும் என்பது உண்மை.** நாடு வளமானது என்றால் படித்தவர்கள், வல்லுனர்கள், விஞ்ஞானிகள், நிபுணர்கள், தொழில்நுணுக்கம் தெரிந்தவர்கள் ஏராளமாக இருப்பார்கள். இதுபோன்ற நாடுகளில் நாட்டின் மதிப்பை நிபுணர்களின் எண்ணிக்கையைக் கொண்டு மதிப்பிடுகிறார்கள். அந்த நாட்டிற்கு ஜனத்தொகை பெருகினால் நாட்டில் திறமையுள்ளவர் எண்ணிக்கை பெருகும். **பஞ்சமான நாட்டில் பெருகும் ஜனத்தொகை பஞ்சத்தைப் பெருக்குவதுபோல் திறமைசாலிகள் வாழ்ந்த வளமான நாட்டில் பெருகும் ஜனத்தொகை திறமைசாலிகளைப் பெருக்கும். நாட்டின் நிலை உயரும்.** அதேபோல் மனித வாழ்வில் வேறுபாடு சண்டை சச்சரவை அதிகப்படுத்தும். சத்தியஜீவிய வாழ்வில் சுமுகம் மிகுந்து இருப்பதால் வேறுபாடு வளர்ந்தால் அது சுமுகத்தை அதிகப்படுத்தி, உள்ள செழிப்பை அபரிமிதமான செழிப்பாக மாற்றும். பூரணமும் சிறப்பும் பூர்த்தி பெறுவதற்கு இந்த அம்சம் மிகவும் முக்கியம். மனம் உள்ளவரை வேறுபாடு அபரிமிதத்தைக் கொடுப்பது அரிது. ஆனால் சத்தியஜீவியத்திற்கு இது இயல்பானது.

சத்தியஜீவியம் மனித குலத்தில் மாறாத பகுதியோடு வாழவேண்டிய அவசியம் உண்டு. மிக உயர்ந்த பகுதி மிகத் தாழ்ந்த பகுதியுடன் சுமுகமாக இருக்கும். மேற்பகுதி சச்சிதானந்தத்தை எட்ட முடியும்.

ஜடமான அறியாமையில் ஆரம்பித்த பரிணாமம் அத்துடன் முடியுமா? என்பது கேள்வி. தொடர்ந்த பரிணாமம் பிணக்கின்றி சுமுகமாக இருக்கும் என்று நாம் முக்கியமாகக் கூறலாம்.

*முற்றும்*

☆ ☆ ☆

## அன்பர் கடிதம்

### *என் வாழ்வில் ஸ்ரீ அன்னை*

பதினான்கு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள், ஒரு பிரபல பெண்கள் மாதாந்திர பத்திரிக்கையை புரட்டிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அதில் வந்திருந்த ஸ்ரீ அன்னையின் படத்தையும், அவரைப் பற்றிய கட்டுரையையும் படிக்க நேர்ந்தது. ஆனால் அச்சமயத்தில் ஸ்ரீ அன்னையின் மகிமை எனக்கு அவ்வளவாகத் தெரியவில்லை.

அவ்வருடம் நான் என் இரண்டாவது மகனை கருவுற்றிருந்தேன். 10 வருடங்கள் கழித்து இரண்டாவது பிரசவம் என்பதாலும், வயதாகிவிட்டபடியாலும் பிரசவம் கொஞ்சம் கடினமானதாக இருக்கும் என்றுதான் நினைத்திருந்தேன். டாக்டர்கள் சந்தேகத்தின்பேரில் 'ஸோனோகிராபி' எடுத்து பார்க்கவேண்டும் என்று சொல்லவே 'ஸோனோகிராபி' எடுத்தோம். அதில் இடிபோன்ற அந்தச் செய்தி தெரியவந்தது. வயிற்றில் கருவுடன் பெரிய ட்யூமரும் வளர்ந்து வருவதால் பின்னால் இது தாய், சேய் இருவரின் உயிருக்கே ஆபத்தாக முடியும் என டாக்டர்கள் நினைத்ததால் அபார்ஷன் செய்துவிடுவதே நல்லது என நினைத்தனர். நாங்கள் வேறொரு டாக்டரிடம் ஆலோசனைக்குச் சென்றோம். அந்த டாக்டர், கொஞ்ச நாள் பொறுத்திருந்து பார்ப்போம். கட்டி தொடர்ந்து வளர்ந்தால் அபார்ஷன் செய்துவிடுவோம். இல்லையானால் தொடர்ந்து கரு வளரட்டும் என்றார். எனக்கு என்ன செய்வதென்றே தெரியாத குழப்பத்திலிருந்தேன். அப்பொழுதுதான் திடீரென ஸ்ரீ அன்னையின் ஞாபகம் வந்தது. மனமுருகி ஸ்ரீ அன்னையிடம் பிரார்த்தனை செய்தேன்.



வாராவாரம் 'ஸோனோகிராபி' எடுத்துப் பார்த்து கட்டியின் வளர்ச்சியைக் கவனித்தனர். இரண்டு வாரங்களுக்கு பிறகு மூன்றாவது வாரம் எடுத்த 'ஸோனோகிராபி'யில் கட்டி இருந்ததற்கான அடையாளம் துளிகூட இல்லாதது டாக்டருக்கே மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இது ஒரு தெய்வ அதிசயம் என டாக்டரே வியந்து கூறினார். அது மட்டுமில்லாமல் டெலிவரியும் நார்மல் டெலிவரியாக அமைந்து ஆண் குழந்தையும் 7 பவுண்ட் எடையுடன் நல்ல நிலைமையில் பிறந்தது. இது அன்னையின் கருணையே அன்றி வேறெதுவும் இல்லை.

மற்றொரு சமயம், என் கணவருக்கு நாங்கள் வசித்து வரும் மும்பையிலிருந்து, மகாராஷ்ட்ராவின் உட்பகுதியான துலே என்னுமிடத்திற்கு மாற்றல் உத்தரவு வந்தது. அவ்விடத்தில் குடிநீர் மூன்று, நான்கு நாட்களுக்கு ஒரு முறைதான் வரும். மிக வறட்சியான பகுதி. நாங்கள் மும்பையிலும், என் கணவர் துலேயிலுமாக 4 வருடங்கள் மிகவும் கஷ்டப்பட்டோம். அங்கிருந்து திரும்ப மும்பைக்கே மாற்றல் கிடைக்காது என்ற நிலையில் என் தாய், தந்தை இருக்குமிடமான சென்னையிலாவது கிடைத்தால் சௌகரியமாக இருக்கும் என நினைத்தேன். அப்படி, சென்னைக்கு மாற்றினாலும் ஒரு கிராமத்தில்தான் போடுவார்கள் என்று என் கணவர் சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் நான் ஸ்ரீ அன்னை என்னைக் கைவிடமாட்டார் என்று கூறி தீவிரமாகப் பிரார்த்தனை செய்தேன். என்ன ஆச்சரியம்! நான் பிரார்த்தனை செய்த இரண்டு வாரங்களுக்குள் என் கணவருக்கு என் தாய், தந்தை வசிக்குமிடத்திற்கு அருகிலேயே ட்ரான்ஸ்பர் கிடைத்தது.

சமீபத்தில்கூட சென்ற வருடம் மிகவும் மோசமான உடல்நிலையில் இருந்த எனக்கு உயிர்பிச்சையளித்து, என்னை இக்கட்டுரையை எழுத வைத்து, அதன்மூலம் கோடானுகோடி

துன்பப்படும் மக்களுக்கு தன்னை அறிமுகப்படுத்தச் சொல்லி அம்மக்களுக்குத் தன் அருளை வாரிவழங்க காத்திருக்கும் என் இனிய பாண்டிச்சேரி ஸ்ரீ அன்னைக்கும், ஸ்ரீ அரவிந்தரின் பொற்பாத கமலங்களுக்கும் என் பணிவான நமஸ்காரங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யாரோ ஒரு வழிப்போக்கரின் உருவில் வந்து ஸ்ரீ அன்னை எனக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்கள் கூறியதை என்னால் மறக்கவே முடியாது. இப்படி ஸ்ரீ அன்னையின் அருள் மழையைப் பற்றி கூறுவதானால் எத்தனையோ சொல்லிக்கொண்டு போகலாம். உலகிலுள்ள கஷ்டப்படும் மக்கள் எல்லோரும் ஸ்ரீ அன்னையின் பாதங்களில் சரணடைந்து, அவரது கருணையால் கஷ்டங்கள் தீர்ந்து, இப்புவியில் நிறைவாழ்வு வாழ ஸ்ரீ அன்னையைப் பிரார்த்திக்கிறேன்.

✯ ✯ ✯

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சாதாரண பலனுக்கென்றாலும், மனத்தின் முடிவு முழுமை பெறும் இடத்தில் அன்னைச் சூழல் அதை உண்மையான ஆர்வமாக மாற்றும்.

*முடிவு முழுமையானால் சூழல் ஆர்வமாகும்.*

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மனதை அன்னை மீது நிறுத்தி, முயற்சி முழுவதையும் முறைப்படுத்தினால், அன்பின் எழுச்சியைப் பூர்த்தி செய்யும்.

*அன்னை அன்பால் நிரப்பும் வகை.*





## "Don't try to know, it is not yet time" — Sri Aurobindo's smile to Mother.

**“தெரிந்துகொள்ள முயலாதே, நேரம் வரவில்லை” என பகவான் ஸ்ரீ அரவிந்தரின் புன்னகை அன்னைக்குக் கூறியது**

காரியம் என்று வந்தபொழுது, முடிவை நினைக்காமல் வேலையைச் செய்தால் அது முடியும் என்பது அன்னை வாக்கு. இதன் உண்மையை அறியவேண்டுமானால் இதுவரை நல்லபடியாக முடிந்த பல காரியங்களை நினைத்துப் பார்த்தால் இதற்குப் பொருத்தமான உதாரணம் கிடைக்கும். அது இல்லையெனில் இனி இதுபோல் ஒரு காரியம் செய்ய முடியுமானால், அது இதன் உண்மையை விளக்கும்.

ஒரு ஸ்தாபனத்தில் கடைசி நிலையில் எதையும் தெரிந்து கொள்ள முடியாதவன், உண்மையோடு உழைத்தால் அவன் நிலை உயருவது அனைவருக்கும் ஆச்சரியமாக இருக்கும். தோட்டத்துக் காவல்காரன் முனிசிபல் மெம்பராகப் போட்டியிடும் நிலைக்கு இதுபோல் உயர்ந்தான்.

ஸ்தாபனத் தலைமைப் பதவியிலுள்ளவர் தம் எண்ணத்திற்கு எட்டாத இலட்சியத்தை ஏதோ காரணத்திற்காக ஏற்றால் ஒன்று ஆயிரமாகும். பாங்க் தலைவர் ஒரு கிராமத்தில் செய்த சேவை உடனே எல்லாக் கிராமங்களுக்கும் இதுபோல் பரவியது.

தெரிந்து, புரிந்து, விழிப்புடன் இலட்சியத்தை ஏற்று, முடிவைக் கருதாமல், எதிர்பார்க்காமல், நினைக்காமல் செயல்பட்டால் பிரபஞ்சம்

திருவுருமாறும் என்ற அனுபவத்தை அன்னை பெற்றுக்கொண்டிருந்த சமயத்தில், ஸ்ரீ அரவிந்தரிடம் அன்னை,

- **எப்பொழுது திருவுள்ளம் பூர்த்தியாகும்?**
- **நான் 100 ஆண்டுகள் இருப்பேனா?**

என்பதுபோன்ற கேள்விகளை எழுப்பியபொழுது பகவான் கூறிய பதில் ஆரம்பத்தில் எழுதியது. நாமே முயன்று பெறுவது தோல்வி அல்லது வெற்றியுடையது. அது நம் கிராமத்தை முயற்சியால் டெல்லியாக்குவது. முயலாமல் பெறுவது சரணாகதி. தெரிந்து கொள்ளவும் முயலாவிட்டால் அங்கு,

- **தோல்வியில்லை, வெற்றி மட்டும் உண்டு.**
- **நம்மை டெல்லியில் இருக்கச் செய்வதுபோன்ற பலன் உண்டு.**

மனம் அடங்கியதுபோல் செயலும் அடங்கினால், ஆத்மாவும் அடங்கினால் நமது கிராமம் தானே டெல்லியாவது போன்ற மாற்றம் வரும். முதல் நிலை முயற்சி, இரண்டாம் நிலை கண்மூடிய சரணாகதி, மூன்றாம் நிலை ஆத்ம விழிப்புடன் செய்யும் சரணாகதி.

☆ ☆ ☆

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஞானம், சக்தி, பலன், ஒரு செயலில் நிதானமாகக் கலந்திருந்தால் நிறைவு ஏற்படும்.

*நிதானம் நிறைவு தரும்.*



## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

அண்ணன் – அந்த initiative எடுக்காதபொழுது திருமணம் முடிகிறது.

தம்பி – அருள் காரியத்தை முடிக்க விரும்பும்பொழுது, மனிதன் initiative எடுப்பதை அருளே தடுக்கிறது போலிருக்கிறதே. இந்தக் கதையைக் கொண்டு ACT செயலின் தன்மை, தத்துவம், முறை, பலன், சூட்சுமம் ஆகியவற்றை விளக்க முடியுமா?

அண்ணன் – செய்யலாம். பேரளவுக்குச் சொல்லலாம். முழுத் திருப்தி ஏற்பட வழியில்லை.

1) **எந்தச் செயலும் பிரபஞ்சத்தைத் தன்னுட்கொண்டது.**
2) **மனிதனுக்கும், சமூகத்திற்கும், சுபாவம், தன்மை இருப்பதைப்போல் செயலுக்கும் உண்டு. எந்த மனிதன் செயலைச் செய்கிறானோ, அவனுடைய சுபாவம் அவன் செயலுக்குண்டு. எந்தச் சமூகத்தில் ஒரு செயல் எழுகிறதோ அதன் தன்மையும் அச்செயலுக்குண்டு.**
3) **சிருஷ்டி, சாதனை: ஒரு செயல் சாதிப்பது சிருஷ்டி சாதிப்பதைப் போன்றது. சிருஷ்டியும் செயலும் ஒன்றே, ஒரே தன்மையுடையவையே.**
4) **செயலின் ஜீவியம், மனிதனுக்குள்ள உரிமை: செயலுக்குத் தன்மையும், சுபாவமும் இருப்பதைப் போல் ஜீவியமும் (consciousness) உண்டு. செயலின் பலனை நிர்ணயிப்பது மனிதனே, அவனது பிரியமேயாகும்.**
5) **வாழ்வின் எதிரொலிக்குச் செயலே கருவி.**

- ✪ டார்சி எலிசபெத்தை விரும்பி, மணக்கும்படிக் கேட்டு, அவள் கோபமாக மறுத்து, அவனும், அவளும் பிறகு மனம் மாறி, லிடியாவால் நிலைமை முழுவதும் மாறி, திருமணம் முடிகிறது. பிரபஞ்சம் என்பது உலகம். உலகம் பரிணாமத்தால் ஞானம் பெறுகிறது. ஞானம் அஞ்ஞானத்திலிருந்து எழுகிறது. இதுவே ஸ்ரீ அரவிந்தம். டார்சிக்கும், எலிசபெத்திற்கும் அவர்கள் வாழ்வே உலகம். கோபம், எரிச்சல், தப்பபிப்பிராயம் ஆகியவற்றுடன் அவர்கள் தொடர்பு ஆரம்பிக்கிறது. பிறகு பிரியம், பாசம், நல்லெண்ணமாக மாறுகின்றன. இது வாழ்வில் பரிணாமம். உலகில் நடப்பதே நம் வாழ்வில் நடப்பதால், நம் செயலினுள் பிரபஞ்சமாகிறது.
- ✪ பொய்யான மனிதன் சொல்வது பொய். விக்காம் சொல்பவை அனைத்தும் பொய். பொய் சொல்பவன் செயல் பொய்யில் முடிகிறது.
- ✪ டார்சி லிடியாவை மீண்டும் வாழ்வுக்குக் கொணர்வது சிருஷ்டிக்குச் சமமான செயல். ஆண்டவன் எப்படி உலகைச் சிருஷ்டிக்கின்றானோ, அதேபோல் டார்சி லிடியாவின் வாழ்வைச் சிருஷ்டிக்கின்றான்.

  டார்சியை வெறுக்கும் எலிசபெத் பெம்பர்லியைக் கண்டு வெறுப்பை விருப்பாக மாற்றுகிறாள். மாறிய அதே நேரம் எவர்மீது விருப்பம் ஏற்பட்டதோ அவர் எதிரே வருகிறார். இதுவே எதிரொலி Life response என்பது.



தம்பி - ஆன்மா வாழ்வை நிர்ணயிக்கிறது என்பதைக் கூறுங்கள்.

அண்ணன் - அருளை நாம் எப்படி ஏற்கிறோம்? நன்றியறிதல், பொய்யிலிருந்து மெய் எழுவது மூலம் இவற்றை விளக்கலாம்.

எலிசபெத்திற்கு டார்சி மீதுள்ள கோபம் போய், தன்னைக் காதலிப்பதற்காக நன்றியறிதல் எழுந்த பிறகுதான் நிலைமை மாறுகிறது.

அருளாக வரும் டார்சியை எலிசபெத் புயலாக வரவேற்கிறாள். நம் வாழ்வை நினைவுபடுத்திப் பார்த்தால், நாம் அருள் வரும்பொழுதெல்லாம் கோபமாக, பராமுகமாக, எரிச்சலாக வரவேற்றது தெரியும். ஆன்மா நம் வாழ்வை நிர்ணயிக்க நாம் அருளை விலக்கும் குணங்கள், வரவேற்கும் குணங்களாக மாறும்வரை காத்திருக்கிறது. மாறும்படிப் புற நிகழ்ச்சிகளை உருவாக்குகிறது.

தம்பி - குறுக்கிடுதல், initiative, தவற்றை விரும்பிச் செய்வது போன்றவற்றிற்குப் பலன் என்ன?

அண்ணன் - டார்சிக்கு ஜார்ஜியானா, பிங்லியை மணக்க விருப்பம். அதனால் பிங்லியை ஜேனை விட்டுப் பிரிக்கவேண்டி, ஜேன் இலண்டனுக்கு வந்ததை பிங்லியிடம் கூறவில்லை.

தம்பி - ஜார்ஜினாவுக்கு £30,000 சீதனம் உண்டு. பிங்லியை விட உயர்ந்தவர்கள் கிடைக்க வாய்ப்புண்டு. பிங்லி ஜேனை மணந்தால் £1000தான் கிடைக்கும். அதிலிருந்து வருஷம் £50 வரும். ஜேனை விரும்புவது பிங்லிக்குதான் நஷ்டம். இது எப்படிக் குறுக்கீடு ஆகும்?

அண்ணன் - டார்சி தனக்குப் பிங்லி brother-in-lawஆக வேண்டும் என்று ஜார்ஜியானாவை மணக்க விரும்பினான். வாழ்வு ஜேனை மணப்பதால் brother-in-law ஆக்கியது. பிங்லி ஜேனை ஆர்வமாகக் காதலித்தது டார்சிக்குத் தெரியும். ஆர்வம், பிரியம், காதல் என்பவை சக்தி வாய்ந்தவை. அவற்றுள் தலையிடுவது சரியில்லை. தலையிட்டதால் என்ன ஆயிற்று?

- செய்ததை மாற்றி பிங்லியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியதாயிற்று.
- பிங்லியையும் ஜேனையும் பிரித்ததை வாழ்வு அனுமதிக்கவில்லை. அதை ஈடு செய்ய வாழ்வு டார்சியை, "லிடியாவையும், விக்காமுவையும்" சேர்த்து வை எனப் பணித்தது.

மேலும் ஒரு காரணமுண்டு. எந்தக் குடும்பத்தில் பிங்லி மணக்கக் கூடாது என டார்சி கருதினானோ, அதே குடும்பத்தில் தான் மணக்க விரும்பினான். இது double standards. தனக்கு ஒரு நியாயம், எதிரிக்கு வேறு நியாயம். வாழ்வு இதை அனுமதிக்காது.

தன் நியாயப்படி பிறர் நடக்கவேண்டும் என டார்சி நினைப்பது அறிவுக்குப் பொருத்தமன்று.

தம்பி - லிடியா ஓடிப்போனதில் ஏதாவது விசேஷமுண்டா?

அண்ணன் - சமூகத்தில் லிடியா ஓடிப்போனவள், வெட்கம் கெட்டவள். இது புரட்சிகரமான நேரம். அளவுகடந்த தைரியசாலிகள் அற்புதமான பரிசு பெறும் நேரம். எதுவும் இரு வகைகளாக இருக்கும் என்பதால் பரிசு சேவை மூலமும் வரும், கொள்ளை அடிப்பது மூலமும் வரும். தைரியம், தெம்பு, துணிச்சல் ஆகிய லிடியாவின் குணங்கள்



பெரியவை. அவை செயல்பட்டு ஓடிவிடுகிறாள். விக்காம் லிடியாவை இழுத்துக்கொண்டு போய்விட்டான் என்பதைவிட லிடியா விக்காமை இழுத்துக்கொண்டு ஓடினாள் என்பதே பொருந்தும். இதன் விளைவுகளையும், அவற்றின் காரணங்களையும் நாமறிய வேண்டும்.

1) லிடியா ஓடிப்போனதால் ஜேனும், எலிசபெத்தும் திருமணம் செய்துகொள்கிறார்கள்.
2) லிடியா செய்த காரியம் அவளைப் பொருத்தவரை வெற்றியாக முடிகிறது.
3) திருமணத்தை நினைக்காத விக்காம், திருமணம் செய்துகொள்ள வேண்டி வருகிறது.
4) விக்காம் சிறுவயது கனவான - டார்சிக்கு brother-in-lawஆக வேண்டும் என்பது லிடியாவால் விக்காமுக்குப் பூர்த்தியாகிறது.
5) டார்சி வீட்டு கர்மம் - ஓடிப்போவது - லிடியாவால் பென்னட் வீட்டிற்கு வருகிறது. நினைத்ததை எப்படியோ சாதிக்கும் திறமை, இராசி லிடியாவுக்கு உள்ளது.
6) சமூகப் புரட்சிக் காலத்தில் சமூகத்தை அலட்சியப் படுத்தும் லிடியாவின் எண்ணம் பூர்த்தியாகிறது. நேரம் லிடியாவுக்கு நல்லதாக இருக்கிறது.
7) ஒருவகையில் பென்னட் குடும்பத்திற்கு லிடியாவே "அதிர்ஷ்டம்" கொண்டு வருகிறாள்.

தம்பி - இதேபோல் எலிசபெத், டார்சியைப் பற்றி சொல்லுங்கள்.

அண்ணன் - 1) முதலில் டார்சி கர்வமாக, அலட்சியமாக இருக்கிறான். அது அவனுக்கே திரும்ப எலிசபெத்

மூலம் வசவாக வருகிறது. விக்காமுடைய பொய்க் கதை எலிசபெத் மேலும் எரிச்சல்பட உதவுகிறது. டார்சி கர்வமாக இல்லாவிட்டால் விக்காம் பொய்யால் டார்சி பாதிக்கப்பட்டிருக்கமாட்டான்.

2) டார்சி தன்னுடன் டான்ஸ் ஆட மறுத்ததால் எலிசபெத் கோபப்படுகிறாள். செல்வன் அலட்சியப் படுத்துவான் என்பதை எலிசபெத் ஏற்றுக் கொண்டிருந்தால், டார்சிக்கு எலிசபெத் மீது அபிப்பிராயம் ஏற்பட்டிருக்காது. செல்வத்தைப் புறக்கணிக்கும் மனப்பான்மை உயர்ந்தது என்பதால், உயர்ந்தவன் மனம் மாறி உயர்ந்த குணங்களுடன் மீண்டும் அவளை நாடி வருகிறான். **உண்மைக்குப் பரிசு; தோற்றத்திற்கன்று**.

3) இது ஒரு பக்கமிருந்தாலும், டார்சியை எலிசபெத்தால் நினைத்தும் பார்க்க முடியவில்லை. சார்லேட் டார்சியின் போக்கைக் காட்டியபொழுதும், proposal வந்த பிறகும், எலிசபெத்தால் டார்சியைக் கணவனாக கற்பனையும் செய்ய முடியவில்லை.

- ✪ **டார்சியே தன்னை நாடி வந்தும், அதை சார்லேட், காலின்ஸ், கார்டினர் கண்டுகொண்டு சொல்லியபின்னும், எலிசபெத்தால் அது நடக்கும் என நினைக்க முடியவில்லை.**
- ✪ **அன்னை நம்மை நாடி வந்தும், அருளைக் கேட்காமல் கொடுத்தபொழுதும் நாம் அன்னைக்குத் தேவை என நம்மால் கருத முடியவில்லை.**



- ✪ **எலிசபெத்திற்கு டார்சியைத் தெரியவில்லை. பெம்பர்லியைத் தெரிகிறது!**
- ✪ **பெரும்பலனைச் சொன்னால் தெரியாது. கண்ணால் பார்த்தால் தெரியலாம், கையால் தொட்டு உணர்ந்தால் தெரியும்.**

4) எலிசபெத்தும், ஜேனும் தெளிவானவர்கள் (persons of character). அதனால் அவர்களால் முன்னுக்கு வர முடிகிறது. மற்ற பெண்களுக்கு மனம் வளரவில்லை. அதனால் முன்னுக்கு வர நினைக்க முடியவில்லை.

5) எலிசபெத்தால் டார்சியைக் கணவனாக மனதில் வரிக்க முடியவில்லை. அதேபோல் டார்சியால் எலிசபெத் தன்னை மறுப்பாள் எனக் கருத முடியவில்லை. மனம் மாறி, கர்வமிழந்து, தன்னை ஏற்க மாட்டாளா என ஏங்கும்வரை நிலைமை மாறவில்லை.

6) டார்சியும், எலிசபெத்தும் ஒருவரையொருவர் கவருகின்றனர். ஒருவர் குறையை நீக்க அடுத்தவர் வல்லவர் என்பதால் இக்கவர்ச்சி எழுகிறது. முடிவாக அக்குறைகள் அடுத்தவரால் விலக்கப்படுகின்றன.

தம்பி - இந்தக் கதையின் பல அம்சங்களைக் கண்டோம். ஸ்ரீ அரவிந்தருடைய கருத்துப்படியும், தத்துவப்படியும், நாம் முக்கியமாக அறியக்கூடியன இக்கதையில் என்ன என்று மீண்டும் ஒரு முறை சொல்லும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

*தொடரும்.....*

☆ ☆ ☆

## உடலின் இருளைத் திருவுருமாற்ற மனித யத்தனம் போதாது, பரமாத்மாவின் ஒளி கீழே வரவேண்டும்

கோபக்காரன், ஆசைப்பிடித்தவன், அநியாயக்காரன் ஆகியவரை எளிதில் மாற்ற முடியாது. ஆனால் மாற்றும் சக்தி உலகில் உண்டு. அது அறிவு. அதுவும் அவனுடைய சொந்த அறிவானால் நிச்சயமாக அவை அடங்கும், மாறும், திருவுருமாறவும் முடியும்.

இந்து முஸ்லீம் கலவரம் ஆரம்பித்தபொழுது போலீஸ் கலவரத்தை அடக்கியது. கலவரம் களேபரமானபொழுது ரிஸர்வ் போலீஸ் வந்து சமாளித்தது. அதுவும் முடியாதபொழுது ஸ்பெஷல் ரிசர்வ் போலீஸ் வரும். கலவரம், களேபரமாகி, மனிதன் நிலையிழந்து செயல்படும் நேரங்களில் போலீஸ், ரிசர்வ் போலீஸ் பயன்படா, இராணுவம் வரும். வடநாட்டில் நிலைமை அதையும் கடந்தது. இராணுவம் வந்தால் இந்து சிப்பாய்கள் முஸ்லீம்களைச் சுடுகிறார்கள், முஸ்லீம் சிப்பாய்கள் இந்து மக்களைச் சுடுகின்றனர். இராணுவம் கலவரத்தை அடக்குவதற்கு பதிலாக கலவரத்தில் பங்குகொள்கிறது. இனி ஆயுதம் பயன்படாது என்பது நிலை. அந்த நேரம் காந்திஜீ வந்தார். உண்ணாவிரதமிருந்தார். மக்களை ஆத்ம சுத்தியை நாடச்சொன்னார். நாட்கள் பல கடந்தன. குண்டர்கள் அடங்கினர், கலவரம் அடங்கியது. நாட்டு வரலாற்றில் இது ஒரு பெரிய திருப்பம். பொதுவாக இது நம் அனுபவம். பிரச்சினை வலுக்கும்பொழுது அடுத்த பெரிய சக்தி தேவை. அவையெல்லாம் தவறும் நிலையில் முடிவான சக்தியே செயல்படும்.

சிறப்பாக மனப்பாடம் செய்பவன் முதல் மார்க் வாங்குகிறான். ஜில்லாவில் முதல் மார்க் வாங்க மனப்பாடம் மட்டும் போதாது. பாடம் புரிந்து மனப்பாடம் செய்பவன் தேவை. மாநிலத்தில் முதல்வனாக வர மனப்பாடம் உதவாது. சொந்த அறிவு தேவை. அகில இந்தியாவில்



முதல்வனாக நிற்க சொந்த புத்திசாலித்தனமும், பரம்பரையாக வந்ததாக இருக்கவேண்டும். இவையெல்லாம் ஒருவன் மேதையாக மலரப் பயன்படாது. அதற்கு புத்தி போதாது. ஆத்ம ஞானம் வேண்டும்.

- **The Life Divineஇல் கடைசி அத்தியாயம் Divine Life தெய்வீக வாழ்வு. அதில்,**
  - **தெய்வீக வாழ்வு பெற நாம் சத்தியஜீவியம் என்றறிந்து உள்ளே சென்று, முழுமை பெற்று, பிரபஞ்சம் முழுவதும் பரவி, ஜடத்தை ஆன்மா ஆட்சி செய்ய வேண்டும்.**
  - **அதைச் செய்வது திருவுருமாற்றம்.**
  - **திருவுருமாற்றத்தைச் சாதிப்பது சரணாகதி.**

  **என்று எழுதுகிறார்.**
- **மேற்சொன்னது 28ஆம் அத்தியாயம்.**

  **அதற்கு முந்தைய அத்தியாயம் No.27 சத்தியஜீவன்.**
- **No.25ஆம் அத்தியாயம் திருவுருமாற்றம்.**

  **இங்கு 3 திருவுருமாற்றங்களைக் கூறுகிறார்.**
- **No.26ஆம் அத்தியாயம் சத்தியாரோகணம்.**

  **மூன்று திருவுருமாற்றம் பெற்றபின் சத்திய ஜீவன் பிறக்க நம் உலகினின்று சத்தியஜீவியம் செல்வது சத்தியாரோகணம். இவ்வத்தியாயத்தின் இரு முக்கியக் கருத்துகளில் மேற்சொல்லப்பட்டது ஒன்று. அடுத்தது,**
  - **புறம் அகமானால் யுகம் க்ஷணமாகும். மேற்சொல்லியதை**
  - **பாதாளத்தின் இருளை பரமாத்மாவின் ஒளியே திருவுருமாற்ற வல்லது**

  **என்று கூறுகிறார்.**

❊❊❊

## யார் சாதகர்?

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

திடீரென ஒரு நாள் நல்ல வெயில் நேரம். காலையிலிருந்து ஓயாது பணிகளை வரையறை செய்தும், மேற்பார்வையிட்டும், உடன் உதவியும் வந்த மேஸ்த்ரி, மாணிக்கத்திடம் பொறுப்பை ஒப்படைத்து அங்கு சாமான்கள் வைப்பதற்கென அமைக்கப்பட்ட கீற்றுக் கொட்டகையில் ஏதேனும் சிறிது ஆகாரம் உண்ணச் சென்றார்.

திடீரென அன்னையின் கார் ஓசையின்றி வந்து நின்றது. அதிலிருந்து வெளிப்பட்ட அன்னையின் திருவுருவைக் கண்ட சிறுவன் கோடி சூரியப் பிரகாசத்துடன் ஓடி வந்தான். மைதானத்தின் படல்கதவைத் திறந்துவிட்டான். கொட்டகையிலிருந்த ஸ்டூலைக் கொண்டுவந்து போட்டான். மேஸ்த்ரிக்குச் செய்தி சொல்லிவிட்டு அங்கு கொட்டகையில் மாட்டியிருந்த அவருடைய குடையை எடுத்துவந்து அன்னையின்மீது வெயில்படாதவாறு விரித்துப் பிடித்துக் கொண்டான். ஸ்டூல்மீது கால்மீது கால்போட்டுக் கம்பீரமாய் அமர்ந்த அன்னை இலேசாய்த் திரும்பி சிறுவனைப் பார்த்துப் புன்னகைத்தார். இதுவே அன்னை அவனுக்கு வழங்கிய ஆசிமொழி. அந்தச் சுடும் வெயில் இனிய தென்றலாய் மாறியது சிறுவனுக்கு. மேஸ்த்ரி ஓடி வந்தார். விரைவில் முடித்துவிடுவதாக அன்னைக்கு வாக்களித்தார். சிறுவனைப் பற்றியும் கூறினார். இவன் பெயருக்கேற்ற மாசில்லாத மாணிக்கம் என்றார். அன்னை தாம் நன்கறிந்த ஒன்றைத் தமக்குக் கூறுவதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டார். இந்தச் சிரிப்பின் பொருள் மேஸ்த்ரிக்குப் புரியாது. மாணிக்கத்திற்குப் புரியும். அவர்கள் மௌனத்தில் நட்பானவர்கள். இது மேஸ்த்ரிக்குத் தெரியாது. வேலை நடைபெறுவது கண்டு நிறைவுடன் திரும்பிவிட்டார் அன்னை.

அந்தச் சூழலே இனிமையானது சிறுவனுக்கு. தெய்வ தரிசனத்திற்குப்பின் கிடைக்கும் மகிழ்ச்சி அது. அன்னையின் வருகையில் பெருமை பெற்றது அவ்விடம். நினைத்து நினைத்து ஒரே மகிழ்ச்சி இவனுக்கு. அந்த மகிழ்ச்சி தந்த பலமோ அளவில்லாதது. அந்த டென்னிஸ் கோர்ட் அமைப்பதில் மேஸ்த்ரிக்கிருந்த பொறுப்பு இவனுக்குமிருந்தது. இவன் ஒத்துழைப்பு அவருக்குத் தெம்பூட்டியது. ஒருவழியாக குறிப்பிட்ட குறுகிய காலத்தில் டென்னிஸ் கோர்ட் உருவாகிவிட்டது. அன்னையின் பொற்பாதங்கள் படப்போகும் அப்புனிதக் கோயிலுக்குத் தன்னுழைப்புச் செலுத்தப் பட்டது எண்ணி எல்லையில்லா மகிழ்ச்சிகொண்டான் மாணிக்கம்.

அடுத்தது அன்னை அமைக்க இருந்த கோல்கொண்ட் கட்டடப் பணிக்கு ஆள் எடுக்கும் செய்தியறிந்து உற்சாகமாய்ச் சென்றான் மாணிக்கம். அங்கு வேலை செய்ய மிகுதியான ஆட்கள் தேவைப் பட்டபோதும் பொருளாதார வசதி கருதி குறிப்பிட்ட ஆட்களே கூலிக்கு எடுக்கப்பட்டனர். மற்றவர்கள் பக்தர்களும், சாதகர்களுமே. எத்தனை பேர் கிடைத்தாலும் இப்பணிக்கு அன்னை அனுப்பிக்கொண்டிருந்தார்.

கூலிக்கு ஆள் எடுத்து முடிவுற்றதால் இவனை நாளை முன்பாகவே வந்துவிடு என்று கூறி திருப்பி அனுப்பினார். இவன் எனக்குக் கூலி ஏதும் வேண்டாம், வேலை கொடுத்தால் போதும் என்றான். இவன் பார்வைக்கு கூலியாள்போல் தோன்றியதால், “முதலில் இப்படிச் சொல்லிவிட்டுப் பிறகு காசு கேட்பாய். கூலிக்கு ஆள் எடுத்து முடிந்துவிட்டது. மேலும் நீ புதிதாய் இருக்கிறாய். என் கூட்டத்தில் உள்ளவர்களை எனக்குத் தெரியும். உன்னை எனக்குத் தெரியாது. நம்பகமில்லாதவர்களை இங்கு வேலைக்கு வைத்துக் கொள்ள முடியாது” என்று தலைமைக் கொத்தனார் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். ‘அன்னையே! உன்மீது நான் வைத்திருக்கும் அன்பில் ஏதேனும் குறை வந்ததா? எதன்பொருட்டு என்னை உம்

பணியிலிருந்து விலக்கினீர்?' என்று உள்ளத்துக்குள் எண்ணிய வண்ணம் வாட்டத்துடன் திரும்பிய சிறுவனை, திடீரென உள்ளே பிரவேசித்த அன்னை, ''வா மாணிக்கம். வேலையில் சேர்ந்து விட்டாயா? நானே உனக்குச் சொல்லி அனுப்ப நினைத்தேன். நீயே வந்துவிட்டாய்" என்றார். தலைமைக் கொத்தனார் குன்றிப்போனார். இதைவிட வேறு நற்சான்றிதழ் வேண்டுமா மாணிக்கத்திற்கு. 'இவன் அன்னைக்கு வேண்டியவனா. இதை ஏன் இவன் என்னிடம் சொல்லவில்லை' என்று எண்ணிய கொத்தனார் மாணிக்கத்தை மன்னிப்பு வேண்டும் பாவனையில் பார்த்தார். அன்றுமுதல் மாணிக்கத்திற்குத்தான் முதலிடம். மற்றவர்களுக்கு அடுத்த இடமே. தன்னை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்வது தவிர வேறு கருத்தில்லை அவனுக்கு. இந்தப் பூரணச் சமர்ப்பணத்தை அன்னைப் புறக்கணிப்பாரா என்ன?

ஒருநாள் கூலியாட்களுக்கு விதிக்கப்பட்ட எண்ணிக்கையில் இவனும் உண்டு. கூலி வேண்டாம் என மறுத்து, "என் உழைப்பை இக்கட்டிடத்திற்கு அர்ப்பணிப்பதே என் நோக்கம். கூலியைப் பெற்றால் என் மனம் நிறையாது'' என்றான் சிறுவன். இந்தச் செய்தி ஆஸ்ரமத்திலும் பரவியது.

இந்தக் காலகட்டத்தில் ஆஸ்ரமத்துச் சாதகர் ஒருவர் அன்னையால் அடிக்கடி அழைக்கப்பட்டும், பணிகள் சில பொறுப்பேற்கப்பட்டும் இருந்தார். ஆரம்பத்தில் பணிவும், பக்தியுமாய்த் தொடங்கிய தொண்டு லேசான கர்வங் கலப்பதாயிற்று. தம்மைப் பற்றி இவருக்குப் பெருமகிழ்வு. அன்னை தன்னையே நம்புவதாய் சிறிது அகம்பாவம் ஏற்படத் தொடங்கிற்று. இவரைக் கண்டு பிற சாதகர்களிடையே லேசான மனத்தாங்கல் ஏற்படலாயிற்று. இது குறித்து அவர்கள் பகவானுக்குக் கடிதமெழுதலாயினர். பகவானும் அவர்களுக்கு அழகுறப் பதில் எழுதியுள்ளார்.

'அன்னையுடன் நெருங்கியிருப்பவர்கள் ஏதோ அருளினால் அல்லது சலுகை காரணமாக அப்படியிருக்கவில்லை. அவர்களுடைய வேலையின் தேவையினால்தான் அருகிலிருக்கிறார்கள். வேலை சம்பந்தமாக அவரை ஸ்தூல மட்டத்தில்தான் சந்திக்கிறார்கள்' என்பதே அந்தப் பதில்.

சம்பந்தப்பட்ட சாதகர்க்கு இந்த உரை ஏற்கவில்லை. ஏதோவொரு சிறப்பினால் மற்றவர்களுக்கில்லாத வாய்ப்புத் தனக்குக் கிட்டுவதாகப் பெருமைபட்டுக்கொண்டார். அன்னைக்குத் தம் பணி மிகவும் தேவை என்றும் எண்ணிக்கொண்டார்.

இந்நிலையில் ஸ்ரீ அன்னை ஸ்ரீ கிருஷ்ணனைப்போல் ஒரு யுக்தியைச் செய்தார். (ஸ்ரீ கிருஷ்ணன் ஒரு சமயம், அருச்சுனன் தானே கிருஷ்ணனுக்கு மிகவும் உகந்தவன் என்று கர்வப்பட்டபோது அவன்முன்பு ஒரு அந்தணரைக் காணும்படிச் செய்தான். அந்த அந்தணர் காய்ந்த புல்லை உண்ணக்கூடிய மிக சாத்வீகராய் இருந்தார். ஆனால் கையில் எப்போதும் ஒரு கொடிய வாளை வைத்திருந்தார். "இத்தனை சாத்வீகராகிய நீர் ஏன் கொடிய வாளைப் பிடித்திருக்கிறீர்?" என்று அருச்சுனன் கேட்டான். "என் பிரபுவை தொல்லை செய்யும் சிலரைக் கண்டால் வெட்டி வீழ்த்தத்தான்" என்றார் அந்தணர். ''யார் அந்தக் கொடியவர்கள்?'' என்றான் அருச்சுனன். "நாரதர், பிரகலாதன், அருச்சுனன்" என்றார் அந்தணர். "இவர்கள் பக்தர்கள் அல்லரோ? இவர்களை நீர் ஏன் கொல்ல வேண்டும்" என்றான்.

''நாரதர் ஓயாது தம்புராவை மீட்டி என் பிரபுவை அமைதியின்றிச் செய்கிறார். பிரகலாதன் விஷத்தை உண்டு என் பிரபுவை ஏற்கச் செய்தான். அருச்சுனன் என் பிரபுவை தேரோட்டச் செய்தான்'' என்றார் அந்தணர்.

இவருடைய தூய அன்பின்முன் தன் பக்தியை எண்ணிக் கர்வப்பட்டதற்கு நாணினான் அருச்சுனன்).

*தொடரும்.....*

☆ ☆ ☆

Regd. with the Registrar of Newsspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Postal Regn. No.TNI PMG (CCR)/114/03-05 Licensed to post without prepayment No.45

## அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## சொசைட்டியின் வெளியீடுகள்

கர்மயோகியின் நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. 20 |
| 2. | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. 20 |
| 3. | சிறியதும் பெரியதும் | ரூ. 20 |
| 4. | கணவன் மனைவி | ரூ. 20 |
| 5. | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. 50 |
| 6. | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.100 |
| 7. | அதிர்ஷ்டம் | ரூ.100 |
| 8. | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.100 |
| 9. | பிரார்த்தனை பலிக்க வேண்டும் | ரூ.100 |
| 10. | பரமனை நாடும் ஜீவாத்மா | ரூ. 20 |
| 11. | ஸ்வரூபம் சுபாவம் | ரூ. 20 |
| 12. | யோக வாழ்க்கை விளக்கம் - I | ரூ. 80 |
| 13. | ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் | ரூ. 60 |
| 14. | நூறு பேர்கள் (2 பாகங்கள் சேர்ந்தது) | ரூ.150 |
| 15. | வாழ்வின் அடிச்சுவடுகள் | ரூ. 60 |
| 16. | அன்னையின் வாழ்வில் | ரூ. 80 |
| 17. | அபரிமிதமான செல்வம் | ரூ. 50 |
| 18. | சரணாகதியின் ஆன்மீகச் சிறப்பு | ரூ. 50 |
| 19. | பகவானும் பக்தனும் | ரூ.100 |
| 20. | Luck | ரூ. 50 |
| 21. | Prosperity and Spirituality | ரூ.100 |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# பிறந்த நாள் தரிசனம்

நட்சத்திரம் விழும்பொழுது நினைத்தால் நம் மனத்தில் உள்ள எண்ணம் ஓராண்டில் நிறைவேறும் என்ற நம்பிக்கை சில நாடுகளில் உண்டு. நட்சத்திரம் விழும்பொழுது மறந்துவிட்டு மீண்டும் நட்சத்திரம் விழவேண்டுமென்றால் அது நடக்காது. பெரிய விஷயங்கள் நடப்பது அரிது. நடந்ததைத் தவறவிட்டால் மீண்டும் கிடைப்பது அரிது.

*பிறந்த நாளில் அன்னை தரிசனம் அப்படிப்பட்டது.*

Feb.26, 1973 அன்று அன்னையைத் தரிசித்தவர், "எனக்கு வயது 62. இதுவரை நான் இப்படி ஓரானந்தத்தை அனுபவித்ததில்லை. நான் பிறந்த அமெரிக்காவில் இது கிடைக்காது" என்றார். 10 நாள்கள் கழித்து அண்ணனும் அண்ணியும் அமெரிக்காவிலிருந்து வந்தனர். அவர்களை சந்தித்தார். பெற்ற பெரும் பேறு மறைந்துவிட்டது. அவருக்குத் தாங்கவில்லை. வாய் ஓயாமல் புலம்புகிறார். பலனில்லை. **அன்னையின் ஸ்பர்சம் அமிர்த ஸ்பர்ஸம், அனந்தமானது, உலக அனுபவத்திலில்லாத ஓர் அம்சம் உடையது**. இப்பெண்மணி புலம்புவதைக் கண்டவர் ஒருவர், "மீண்டும் தரிசனத்தை நினைவு கூர்ந்தால், இழந்ததைப் பெறலாம்" என்றார். பலமுறை செய்த முயற்சிக்குப் பலனில்லை. அவர் மனம் வெதும்புவதைக் கண்ட அவர், "நீங்கள் அன்னையிடம் என்ன எடுத்துப் போனீர்கள்'' என்றார். ''மலர்ச் செண்டு'' பதில் வந்தது. ''எங்கு காத்திருந்தீர்கள்" என்றார். "அன்னை அறைக்கு வெளியேயுள்ள மொட்டை மாடியில்" என்றார். "அப்புறம்". "என் பெயரைக் கூப்பிட்டார்கள். நான் அன்னை அறையுள்......" என்று கூறியபொழுது இழந்த தரிசன ஆன்மீக ஆனந்த அனுபவம் மீண்டும் முழுமையாக வந்தது.

- **இழந்ததை உலகில் பெற முடியாது. அன்னையிடம் பெறலாம்.**
- **ஆத்மானுபவம் அரிது. அதை இழந்தால் பெற முடியாது. அன்னையிடம் அதையும் பெறும் வாய்ப்பு மனப்பக்குவம் உடையவர்க்குண்டு.**

★ ★ ★

# பிரபலமான காவல்காரன்

நெடுநாள் திருடி ஒரு முறையும் அகப்பட்டுக்கொள்ளாத திருடன், இனி திருடுவதில்லை என முடிவு செய்தான். வேறு ஊருக்குப் போய் வேலை தேடினான். காவல்காரனாகச் சேர்ந்தான். இவன் வேலையில் சேர்ந்ததிலிருந்து ஒரு பொருளும் திருடு போவதில்லை. மகசூல் பெருகுகிறது. முதலாளிக்குப் புது நிலம் வருகிறது. சிறிய இடம் பெரிய இடமாயிற்று. அங்கு வருபவர்கள் சுபிட்சமாக இருக்கிறார்கள். அதை விட்டுப் போனவர்களும் நன்றாக இருக்கிறார்கள். காவல்காரன் போதுமான சம்பளம் பெறுகிறான். தன் திறமைக்கு இரு மடங்கு சம்பளம் பெறலாம் என நினைக்கிறான். உடன் உள்ளவர் வாழ்வில் அவன் எண்ணம் பலிக்கிறது. எனக்கு வரவில்லையே என்கிறான்.

திருடுவதை நிறுத்திவிட்டான். திருடு மனத்தில் இருக்கிறது. "நான் மட்டும் பழையபடி இருந்தால், எப்படியெல்லாம் இங்குத் திருட முடியும்" என கற்பனை செய்கிறான். கற்பனை மனத்தைப் பூரிக்கச் செய்கிறது. தன் மனம் கடுமையான திருடனின் கொடுமைக்குரியது என அவன் அறிவான். திருடுவதை நிறுத்திவிட்டானே தவிர, திருடனின் முரட்டுத்தனத்தைக் காட்டத் தவறுவதில்லை. எந்த அளவு மாற முயன்றாலும், அந்த அளவு அவன் மனம் கடுமையாகிறது. அவனிடம் பழகியவர், "இவனைச் சந்தித்தால் உடனே நமக்கு ஆபத்தும், நஷ்டமும் வருகிறது" என்று கண்டு ஒதுங்கியதை அவன் அறியான். அவனும் அன்னை பக்தனானான். அவன் கடுமையை முயன்று வளர்த்தான். அவன் வாழ்விலும் ஒளி வீசியது. உடனே அதை பிறரை அதிகாரம் செய்யப் பயன்படுத்தினான். அத்தனையும் நின்றுவிட்டன. இவன் ஆபத்தின் உறைவிடம் என அறிந்துகொள்ளாமல், பரிசை எதிர்பார்க்கிறான்.

- **பலன் செயலுக்கன்று, மனநிலைக்கு.**
- **மனம் உண்மையாக மாறினால், மலை போன்ற மாற்றம் வாழ்வில் உதயமாகும்.**

★ ★ ★